பதிவு எண் 2041 மகாத்மா காந்தி வாழ்க. தனிப்பிரதி விலை அணா ஒன்று



வருட சந்தா பணம் ... ரூ 3- 0
6 மாதச் சந்தா ,, ... ரூ 1-12
வெளி நாட்டு ,, ... ரூ 4- 0

[வாரப்பதிப்பு]
ஆசிரியர்
ஈ. வெ. இராமசாமி நாயக்கர்

வியாபாரிகள் விளம்பரம் அங் 1க்கு அ. 12
கோர்ட் விளம்பரம் அங்குலம் 1க்கு ரூ
☞ தனி விகிதமும் உண்டு.

வால்யூ 2 | ஈரோடு, பிரபவ-ளு சித்திரை-மீ 12உ (24—4—27) ஞாயிற்றுக்கிழமை. | மலர் 52.

மின்சார ரசம்.

☞ மின்சாரரசம்.

ஒன்றே எல்லா வியாதிகளுக்கும் தேவாமிர்தம் போன்றதென உலகப்பிரசித்தி பெற்றுள்ளது எந்த வியாதிக்கும் துளிக்கணக்கில் உபயோகித்து நிமிஷக்கணக்கில் குணம் பெறலாம். பத்தியமில்லை. அனுபானமில்லை. பாலியர் முதல் விருத்தாப்பியர் வரையில் ஸ்திரீகள உள்பட எல்லோரும், எக்காலத்திலும் பயமின்றி இதை உபயோகிககலாம. பாஷாண சம்மந்தமான சரக்குகள் இதில் இல்லை.

புட்டி 1-க்கு ரூ. 2.
தபாற் சார்ஜ் வேறு.

REGISTERED TRADE MARK
MINSARA RASAM

☞ மின்சாரரசம்.

ஒரு பட்டி கையிலிருந்து விட்டால் வேறு டாக்டர்களை தேட வேண்டிய அவசியமே இராது மனிதர்களுக்கு திடீர் ஆபத்தை யார் அறிவார்! எந்தசமயம் எப்படி இருக்குமோ! ஒரு வேளை ஒரு துளி மின்சாரரசமே ஒருவரை மாண அபாயத்திலிருந்து விடுவித்து விடலாம். அப்படி அநேகர் உயிர் தப்பியுமிருக்கின்றனர். ஆகவே நோயாளிகளுக்கு இது ஓர் உயிர்த் தோழன். ஒவ்வொரு குடும்பத்திற்கும் இன்றியமையா ஆபத்து நேசன். இன்றைக்கே எழுதுங்கள்.

கைகண்ட மருந்து. கேட்லாக் இனும்.

விலாசம்:— மின்சாரரசம் கம்பெனி லிமிடெட், சேலம். (S. I) தந்திவிலாசம்:—"Rasamco"

மதுரையில் இதன் முக்கிய வியாபாரிகள்:— T. N. சொக்கலிங்கம் பிள்ளை & சன்ஸ், வடக்கு சித்திரைவீதி, மதுரை.

மலாய் நாடுகளுக்கு சோல் ஏஜண்டுகள்:— ஆர். இ. முகம்மது காசிம் & கம்பெனி, கிள்ளாங், பினாங், சிங்கப்பூர்.

சட்டசபையில் சத்தியமூர்த்தியின் வஞ்சகம்.

பார்ப்பனரல்லாதாருக்கு கல்வி ஸ்தாபனத்தில் உள்ள ஆதிக்கத்தை ஒழிக்க ஸ்ரீமான் சத்தியமூர்த்தி கொண்டுவந்த யுனிவர்சிடி சட்ட திருத்த மசோதாவின் மேல் ஸ்ரீமான் S குமாரசாமி ரெட்டியார் பேசியது: –

கனவான்களே! இவ்விஷயத்தில் பேசக்கூடாதென்று ஆரம்பத்தில் நினைத்தேன். கல்வி ஞானக்கடலை உண்டு ஏப்பமிட்ட கல்விக்களஞ்சியங்களே பேசட்டும்; நான் என் தலை இட்டுக்கொள்ளவேண்டுமென்று எண்ணியே இதுவரை சும்மாவிருந்தேன். ஆனால் மதுரைப் பிரதிநிதியார்கள் பேசிய பின்னர் நானும் கூட ஏன் பேசலாகாது என்ற முடிவுக்கு வந்தேன். என்னுடைய கட்சியார்களெல்லாம் சேர்ந்து யூனிவர்சிடி அங்கத்தினரைக் கணிப்பது தகாது என்றும், யுனிவர்சிடி அங்கத்தினருக்காக வக்காலத்து வாங்கிக்கொண்டு மிகவும் வீரமாகப் பேசினர். அம்மாதிரி தனது நண்பருக்குப் பரிந்து பேசுவதன் மூலம், உண்டான பயனைக் கவனித்துப் பார்த்தால், நான் என் மதுரை நண்பரைப் பாராட்டமுடியவில்லை. அவர், தான் வீராவேசம்கொண்டு பரிந்து பேசிய பிரசங்கத்தால், தனக்கு எதிரே வீற்றிருக்கும் தனது நண்பர் திரு. சத்தியமூர்த்தியைக் காட்டிக் கொடுத்தவராகி விட்டார். திருவாளர் சத்தியமூர்த்தி ஐயர் வெகு ஜாக்கிரதையாக வேறொருவர் கண்ணுக்கும் படாமல் தன் மேலாடைக்குள் ஒளித்து வைத்திருந்த பூனையை [பிராமண பூனை] வெளியில் இழுத்து விட்டு விட்டார். அதாவது பையிலிருந்த பூனையும் வெளிவந்து விட்டது. குட்டும் வெளியாய் விட்டது. திரு சத்தியமூர்த்தி அய்யரின் உண்மையான உத்தேசம், அவர் தம் உள் எண்ணம் முதலியவற்றை மதுரை மெம்பர் எங்களெல்லோருக்கும் காட்டிக்கொடுத்து விட்டார்.

இந்திய நாட்டிலுள்ள ஆயிரக்கணக்கான ஜாதிகள் போதாதென்று என் மதுரை நண்பர் [கே. ஆர். வெங்கடராமய்யர்] மற்றொரு ஜாதியை சிருஷ்டித்து விட்டார்! அதற்கு "படித்த ஜாதி" என்று நாமகரணமும் சூட்டி விட்டார்! மற்றும், அந்த ஜாதியார் தான் சென்னை யுனிவர்சிடியில் எல்லா அதிகாரங்களும், எல்லாச் செல்வாக்குகளும், எவ்வித ஆட்சியும் நடத்தவேண்டும் என்று சொல்லியும் விட்டார். இந்தப் "படித்த ஜாதி" என்பது புதிய ஜாதியல்ல. இது பழம்பெருச்சாளி ஜாதிதான். இந்தப் "படித்த ஜாதி" நம் நாட்டில் பல்லாண்டுகள் இருந்து வரும் கூட்டம்தான். நமது மதுரை நண்பர் அக்கூட்டத்திற்கு ஒரு புது உருவமும் ஒரு புதுப் பேரும் மாத்திரம் கொடுத்தாரே யொழிய "பழைய கருப்பன்" தான். நமது மதுரை நண்பர் அப்பழைய கூட்டத்திற்கும் திரு. சத்தியமூர்த்திக்கும் செய்த துரோகமெல்லாம் என்னவெனில், பழமொழிப்படி அப்பழைய கருப்பனை மூடிவைக்காததுதான். திரு சத்தியமூர்த்தி அய்யரைப்போல் அவ்வளவு பெரிய பாவனை செய்து நடிக்கவில்லை. தானும் பசுத்தோல் போர்த்திக் கொண்டிருப்பினும் உள்ளிருக்கும் புலியைப் பிறர் காணும்படி இறக்கப் போர்த்திக்கொண்டாரில்லை! "படித்த ஜாதி" என்று சொன்ன ஜாதி, என் மதுரை நண்பர் எந்த ஜாதியோ, அந்த ஜாதிதான் என்று நாங்களில் கண்டுபிடிக்கவர்கள் யாரிருக்கிறார்கள்? அந்த ஜாதியில் தானே எல்லா அதிகாரங்களும் ஐக்யமாக வேண்டும்! மதுரை நண்பர், திரு. சத்தியமூர்த்திக்காகப் பரிந்து பேசு முகத்தான், பேசிக் காட்டிக் கொடுத்து விட்ட உண்மை இதுதான். இதற்காக திரு சத்தியமூர்த்தி அய்யர் என் மதுரை நண்பரைப் பாராட்டுவார் என்று நான் நம்பவில்லை. நான் என் மதுரை நண்பருக்கு ஒன்று சொல்ல விரும்புகிறேன். பணக்கார மந்திரி சபை தோன்றினாலும் தோன்றலாம்; சுப்பராய மந்திரி சபை நிலைநாட்டத் தோன்றலாம். ஆனால் எல்லாச் "சுதந்தரங்களும் எங்களுடையதே; நாங்களே ஏகபோக மிராசாய் எல்லாவற்றையும் அனுபவிக்க வேண்டியவர்கள். எங்களை ஏன் அப்படி என்று கேட்பதற்கு யாருக்கும் யோக்கியதை இல்லை" என்று பார்ப்பனர் அதிகாரம் செய்து கொண்டிருந்த காலம் மாத்திரம் இனி என்றும் வராது என்பதை என் மதுரை நண்பருக்கு எடுத்துக்காட்ட விரும்புகிறேன். ஏன்? அந்தக்காலம் மலையேறி விட்டது. எந்த பார்ப்பனரும் சுயமரியாதையைத் தாண்டவமாடும் காலம் தோன்றிவிட்டது. இனி இத்தகைய பார்ப்பன சலசலப்புக்குப் பனங்காட்டு நரிகள் பயப்படப்போவதில்லை. பல்வேறு வகுப்புகளுக்கும் நியாயம் வழங்கவேண்டும் எல்லா வகுப்பாரும் ஆட்சிமுறையில் பழக்கப்படவேண்டும். ஒவ்வொரு வகுப்பாருக்கும் சமசந்தர்ப்பங்கள் கொடுக்கப்படல் வேண்டும். ஒவ்வொரு வகுப்பாரின் ஜனத்தொகைக்குத் தக்கவாறும், சர்க்காருக்குச் செலுத்தப்படும் வரித்தொகைக்குத் தக்கவாறும் அவர்களுக்குச் சர்க்காரில் பங்கு இருக்கவேண்டும்; அப்படிக்கன்றி "நல்ல வாயன் சம்பாதிக்க நாறல்வாயன் செலவு பண்ண" என்று இதுவரையில் ஏமாற்றி வந்ததுபோல் இனி படியாது என்னும் உயர்ந்த உத்தமக் கொள்கைகளைத் தற்சமயம் எல்லா அரசியல் வாதிகளும் எல்லா இராஜீயக் கட்சிகளும் மும்முரமாய் ஆதரிக்க ஆரம்பித்து விட்டன. இத்தகைய உத்தமக் கொள்கைகளை வெளியிலெடுத்துச் சொல்லவும் பயப்பட்ட நாட்களெல்லாம் பறந்தோடிவிட்டன. தற்சமயம் நம் மாகாணத்தில் இத்தகைய உயர்ந்த கொள்கைகளுக்குத்தான் செல்வாக்கு இருக்கிறது. மற்றைய வகுப்பார்களைக் காட்டிலும் நாங்கள் பனையளவு உயர்ந்தவர்கள், மற்றையோர்கள் எங்களைக் காட்டிலும் பாதாளமளவு தாழ்ந்தவர்கள்" என்று பாமர ஜனங்களை ஏமாற்றி வந்த பார்ப்பனப் படுமோசங்கள், பார்ப்பன டம்பங்கள் ஆடிக்காற்றிலகப்பட்ட பஞ்சைப்போல பறந்தோடிக்கொண்டிருக்கிறது. ஆதலால் அத்தகைய இறந்துபோன கொள்கைகளுக்கும் புத்துயிர் கொடுக்க முயற்சித்து காரியம் பலிக்காமல் ஏமாறுவதைக் காட்டிலும், பயன்தரக்கூடிய வழிகளில் தன் காலத்தையும் காலத்தையும் சிரமத்தையும் செலவழிக்குமாறு நான் என் மதுரை பிராமண நண்பருக்குச் சொல்லுகிறேன். இம்மாதிரி அனுசிதமான கவைக்குதவாத வார்த்தைப் பேசி சட்டசபையின் காலத்தை இனியாவது போக்காதிருப்பாரானால், இச்சட்டசபை மாத்திரமல்ல, இத்தேச மக்களுங்கூட அவருக்கு வந்தனம் செலுத்துவார்களென நம்புகிறேன். "படித்த ஜாதி" யாம், தன் பார்ப்பன ஜாதி தான் ஏகபோக மிராசாய் எல்லாவற்றையும் அனுபவிக்க வேண்டும் என்று பேசியவர்களுள் என் மதுரை நண்பரே கடைசி மனிதராய் இருந்து விடட்டும் என்று கடவுளைப் பிரார்த்திக்கிறேன். சுயமதிப்புள்ள மனிதர்களால் வெறுக்கப்படுகின்ற இத்தகைய "படித்த ஜாதியும் ஏகபோகமிராசும்" என்ற வார்த்தைகளை இனி எந்த சுயமதிப்புடையவர்களும் பேசமாட்டார்களென்று நம்புகிறேன். மதுரை நண்பரை அத்துடன் விட்டுவிடலாம்.

இனி திருத்த மசோதாவைச் சற்று ஆராய்வோம், எனது மயிலை நண்பர் இங்கிலாந்து தேசத்திலேற்பட்ட ஒரு பல்கலைக்கழகம் [யுனிவர்சிடி] உதாரணமாகக் காட்டியிருந்தார். என் மதுரை நண்பர் அந்தப் பல்கலைக்கழகத்தை மதிக்கமாட்டாராம். ஆனால் தன் மனோராஜ்யத்தில் தான் ஏதோ கனவு கண்டுகொண்டிருக்கிற, இன்னதென்று சொல்லமுடியாத, உருவமல்லாத ஒரு யுனிவர்சிடியிடம் தான் மதிப்பிருக்கிறதாம். பல்கலைக்கழகத்தை சீர்திருத்த எந்த ஒரு யுனிவர்சிடியை உதாரணமாக வைத்துக் கொள்ளலாம் என்று அவர் சொல்லவே இல்லை. 'மனுஸ்மிருதி' யிலிருந்து தெரிந்து கொள்வதா? அப்படி அவர் சொல்லியிருந்தாலும் அந்த பண்டைக்கால தர்ம சாஸ்திரத்தைப் படித்தாவது தெரிந்து கொண்டிருக்கலாம். நமது சர்வகலாசாலையைத் திருத்தியமைக்க இங்கிலாந்தில் சமீபத்தில் ஏற்பட்ட ஒரு சர்வகலாசாலையைப் பின்பற்றலாம் என்று சொன்ன என் நண்பர் மயிலைப் பிரதிநிதியைத் தாக்கிப் பேசிய என் மதுரை நண்பரின் மனோநிலை, மனப்பான்மையானது அந்த திருத்த மசோதாவை பட்சபாதமில்லாமல் விவாதித்து யோசிக்கத்தக்க சந்தர்ப்பங்களைக் கெடுத்துவிட்டதென்றே சொல்லுவேன். 1923-ம் வருஷத்தில் மசோதாவாகக் கொண்டு வரப்பட்டு, பின்னர் சட்டமாக்கப்பட்ட சென்னை யுனிவர்சிடி சட்டமானது இங்கிலாந்திலுள்ள பிரிஸ்டல் யுனிவர்சிடியின் மாதிரியிலும், அதன் கொள்கையிலும் தான் ஆக்கப்பட்டது என்று அந்த சட்டத்தை ஆலோசித்த செலக்ட் கமிட்டியில் வீற்றிருந்த பல அங்கத்தினர்கள் சொல்ல நான் கேட்டிருக்கிறேன்.

இந்த திருத்த மசோதாவைக் கொண்டு வருவதற்குக் காரணங்களையும், அதனுடைய நோக்கங்களையும் பற்றி திரு. சத்தியமூர்த்தி அய்யர் பேசியதைப்பற்றி ஒரு வார்த்தை சொல்லவிரும்புகிறேன். பூர்த்தியில்லையாயினும், முக்கியமாக இம்மசோதாவின் நோக்கமெல்லாம், கல்விச் சபை (செனேட்) அங்கத்தினரின் தொகையைப் பொருத்ததாகவே இருக்கின்றது. திரு அய்யர், ஆரம்பத்திலேயே ஐயோ பாவம் நமக்கு எதிரில் உட்கார்ந்து கொண்டிருக்கிற புரோசான்சலர், அதாவது கல்வி மந்திரியை, அக்கல்விச் சபையிலிருந்து ஒழித்துவிட வேண்டுமென்கிறார்! அதைப் பற்றி நமக்குக் கவலை வேண்டாம். அதை முடியுமானால் புரோசான்சலரே பார்த்துக் கொள்ளட்டும். அடுத்தபடி திரு அய்யர், கல்விச் சபையின் அமைப்பைப்பற்றிக் கூறுகிறார் அதன் பின்னர், அம்மசோதாவின் இதர முக்கிய நோக்கங்கள் என்று அய்யரால் சொல்லப்படுபவைகள், ஐந்து வரிகளைக்கொண்ட ஒரே பாராவில் அடங்கிவிட்டது; என்ன மசோதா! இது எவ்வளவு பெரிய திருத்த மசோதா! "குதிரை பொட்டையானாலும் கொள்ளு தின்பதில் குறைச்சலில்லை" என்பதைப்போல இருக்கிறது இப்பெரிய மசோதா! இதற்குப்பின் அய்யர் என்ன சொல்லுகிறார் யாரை ஒழிக்க வேண்டுமென்கிறார்? "இணைக்கப்பட்ட கல்லூரிகளின் சபை"யை ஒழித்துவிட வேண்டுமாம், மற்றும் அம்மசோதாவிலிருப்பதென்ன! "கலைக் கவுன்சில்" (Academic Council) வேண்டுமான அதிகாரங்களைப் படைத்த ஒரு நிரந்தரக் கமிட்டியாய் அமைக்கலாம் என்று கண்டிருக்கிறது இவ்வளவுதான் இதாவது புரோசான்சலரை நீக்குதல் இணைக்கப்பட்ட கல்லூரிகளின் சபையை ஒழித்தல் "அகேடமிக் கவுன்சில்" ஒரு நிரந்தரக் கமிட்டியை நியமித்தல் ஆகிய இவைகளே தான் இப்"பெரிய" இவ்வுயர்ந்த மசோதாவின் நோக்கங்களென்று சொல்லப்பட்டவைகளாகும்.

இதன் தொடர்ச்சி 15-ம் பக்கம் பார்க்க.

எது பொய்ப் பிரசாரம்?

19-4-27 தேதி "தமிழ் நாடு" தலையங்கத்திற்கு பதில்

'தமிழ் நாடு' தனது ஏப்ரல்-மீ 19 உ பத்திரிகையில் "பொய்ப் பிரசாரம்" என்பதாக பேரிட்டு ஒரு தலையங்கம் எழுதியிருக்கிறது. அதில் தமிழ் நாட்டைப்பற்றி "சுதேசமித்திரனும்" "குடி அரசும்" "தமிழ்நாடு" யோக்கியதைக் குறித்து எழுதிய குறிப்புகளுக்கு பதில் எழுதியதாக ஜனங்கள் நினைக்கும்படி என்ன என்னமோ உளறிக்கொட்டி இருக்கிறது. அவற்றுள் மித்திரனைப் பற்றி எழுதியிருப்பவைகளை நாம் கவனிக்க வேண்டியதில்லை ஏனெனில் ஸ்ரீமான்கள் அய்யங்காரும் நாயுடுகாரும் நினைத்தால் சண்டை போட்டுக்கொள்ளுவார்கள், நினைத்தால் ராஜியாகி விடுவார்கள். ஏனென்றால், மித்திரன் ராஜீய அபிப்பிராயத்திற்கும் கொள்கைக்கும் "தமிழ்நாடு"வுக்கும் யாதொரு வித்தியாசமும் இல்லை என்று தமிழ் நாடுவே எழுதியிருக்கிறபடியால் நாம் அதை கவனிக்க வேண்டியதில்லை. தவிர "தமிழ்நாடு" "குடி அரசு" வைப் பற்றி எழுதியதைமாத்திரம் எடுத்துக்கொள்ளுவோம்.

உண்மையும் யோக்கியதையும் பெருமையும் உள்ள பத்திரிகைகளாயிருந்தால் தன்னைப்பற்றி ஏதாவது ஒரு பத்திரிகை எழுதினால் அதுகளை எடுத்து சரியாய்ப் போட்டு அதற்கு சமாதானம் சொல்லவேண்டியது நியாயம். அப்படிக் கில்லாமல் வெறும் வீணான வார்த்தையை உபயோகித்து மக்களை ஏமாற்ற நினைப்பது மிகுதியும் இழிதனமென்றே சொல்லுவோம். "குடி அரசு" "தமிழ்நாடு" முதல் இதழ் வெளியானதும் அதிலுள்ள வாசகங்களில் சிலதை எடுத்து எழுதி பிறகு அதை குற்றம் சொல்லி இருக்கிறதே அல்லாமல் திருட்டுத்தனமாகவோ யோக்கியப் பொறுப்பில்லாமலோ ஒரு வரியும் எழுதவில்லை. அதற்குத் தமிழ் நாடு இப்பவும் என்ன சமாதானம் சொல்லுகிறது என்று தான் கேட்கிறோம். சுதேசமித்திரன் ராஜீய அபிப்பிராயமும் சுதேசமித்திரன் கொள்கையும் ஸ்ரீ வரதராஜுலு நாயுடு ராஜீய அபிப்பிராயமும் கொள்கையும் ஒன்றாயிருக்குமானால் "தமிழ்நாடு" பத்திரிகை தேசாபிமானத்தை முன்னிட்டு நடத்தப்படுவதாக எப்படி கருதக்கூடும்? அதோடு பார்ப்பனரல்லாதார் முன்னேற்றத்திலும் தனக்கு கவலை இருப்பதாய் காட்டிக் கொள்வதை எப்படி நம்பக் கூடும் என்று தான் கேட்கிறோம். சுதேசமித்திரனுடைய தேசாபிமானத்தைப் பற்றியும், பார்ப்பனரல்லாதார் விஷயத்தில் சுதேசமித்திரனுக்குள்ள கொள்கையைப் பற்றியும், ஸ்ரீமான் வரதராஜுலு நாயுடு இதற்கு முன் சொன்னதும், எழுதினதும் இப்போது என்ன வாயிற்று என்று கேட்டதற்கு மறுமொழி சொல்வதல்லவா யோக்கியமான காரியமாகும்? அதை விட்டுவிட்டு ஸ்ரீமான் ராமசாமி நாயக்கரின் நோக்கத்தைப்பற்றி ஏதோ தெரிந்து விட்ட மேதாவி போல் பேசி விட்டால் ஜனங்கள் ஒப்புக்கொள்ளுவார்களா? என்று கேட்கிறோம்? மற்றவர்களுக்குள்ள தேசாபிமானமும், வகுப்பு அபிமானமும், ஸ்ரீ வரதராஜுலு நாயுடுவுக்கும், தமிழ் நாடு பத்திரிகைக்கும் இருப்பதாக வாயினாலும் எழுத்திலும் காட்டினால் போதுமா? செய்கையில் கடுகளவாவது காட்டவேண்டாமா? பாமர மக்களை வெறும் தேசீயப் பேச்சால் ஏமாற்ற வந்த பழய யோகத்தை மூட்டை கட்டி வைத்து விடும்படி வேண்டிக்கொள்ளுகிறோம். "பெசண்டை எதிர்த்ததும்" "குருகுலக் கிளர்ச்சியையும்" ஆயிரக்கணக்கான தடவை சொல்லிக்கொள்வதால் நாட்டுக்கோ, சமூகத்திற்கோ, காதருந்த ஊசியளவு பயனும் விளையாது. பெசண்டம்மையை அய்யங்கார் பார்ப்பனர்கள் சூழ்ச்சி செய்த காலத்தில் ஸ்ரீமான் வரதராஜுலு நாயுடுவையும், ஸ்ரீமான் சத்தியமூர்த்தியையும் ஆயுதமாக உபயோகித்துக்கொண்டார்கள் என்பது எல்லோருக்குமே தெரிந்த விஷயம் தான்.

பார்ப்பனர்கள் இப்போது பார்ப்பனரல்லாதார் முன்னேற்றத்திற்கு அநுகூலமான ஆசாமிகளையும், இயக்கங்களையும், வைகிற ஆசாமிகளை எப்படி தலைவர்களாக்கி தூக்கி வைக்கிறார்களோ, அதுபோல அந்தக்காலத்தில் பெசண்டம்மையாரை வைத ஆசாமிகளையும் தலைவர்களாக்கி தூக்கி விட்டுக்கொண்டு கூலிகொடுத்துக் கொண்டு வந்தார்கள். அச்சமயம் அதுகளை [illegible] ஸ்ரீமான் நாயுடுவைப் போல் தாக்கி பயன் பெற்றிருக்கிறார்கள். குருகுல கிளர்ச்சியின் பெருமையும் யாரும் அறியாததல்ல. குருகுல கிளர்ச்சி எப்படி ஏற்பட்டதென்பது பற்றி இனியும் யாருக்காவது தெரிய வேண்டுமானால் 12-7-25ந் தேதி "குடி அரசை"ப் பார்த்தால் தெரியும். கடைசியாக அது என்னவாயிற்று என்கிற இரகசியமும் அதில் கலந்திருந்தவர்களை கேட்டால் தெரியும். ஆகவே இந்த இரண்டின் பெருமையை எவ்வளவு நாளைக்கு எத்தனை தடவை எடுத்தெடுத்துச் சமாதானமாக சொல்லிக்கொண்டு வாழ்வது என்பது நமக்கு விளங்கவில்லை.

இப்போழுதும் கேட்கிறோம்: சுயராஜ்யத்திற்கு ஸ்ரீ வரதராஜுலு நாயுடுவின் கொள்கை என்ன? திட்டம் என்ன? காரியத்தில் அமுல் என்ன? பார்ப்பனரல்லாதார் முன்னேற்றத்தில் ஸ்ரீமான் வரதராஜுலு நாயுடுவின் கொள்கை என்ன? திட்டமென்ன? காரியத்தில் அமுல் என்ன? அவைகள் எந்த தேதி முதல் எந்த தேதி வரை அமுலுக்கு வரத்தக்கது அல்லது வந்து கொண்டு இருந்தது என்று சொல்லட்டும் என்று தான் கேட்கிறோம். மத சம்பந்தமான சில பாஷாண்டிகள் பக்தி சம்பந்தமான சில பரிபாஷை சொற்களை சொல்லிக்கொண்டு காலங்கழிப்பது போல் ராஜீய சம்பந்தமான சில சொற்களை மாத்திரம் உபயோகப்படுத்தி வருவது மாத்திரம் தேசாபிமானம் சமூகாபிமானம் என்று இனியும் சொல்லி ஏமாற்றப்பார்த்தால் யார் பொறுத்துக்கொண்டிருக்க முடியும்? அப்படி ஒரு மனிதன் பொறுத்துக்கொண்டு இருப்பதின் மூலம் தேசமும் சமூகமும் பாழ்படுவதை கண்ணால் பார்த்துக்கொண்டும் தனது சுய நன்மைக்காகவோ பிறர் தாட்சிண்யத்திற்காகவோ சும்மாவிருப்பது மனிதத்தன்மை அல்ல வென்பதே நமது அபிப்பிராயம். அதனாலேயே தான் இவற்றை எழுதுகிறோமே தவிர, வேறு காரணமில்லை என்பதை ஸ்ரீமான் வரதராஜுலு நாயுடு நம்ப வேண்டும் என்று வேண்டுகிறோம். நம்பவில்லையானால் நமக்கு அதைப்பற்றி கடுகளவு கவலையுமில்லை.

தவிர "தம்மைத்தவிர வேறு யாருக்கும் பார்ப்பனரல்லாத இயக்கத்திலோ முன்னேற்றத்திலோ அக்கரை கிடையாது என்று ஸ்ரீமான் ராமசாமி நாயக்கர் சொல்லுவதை நாம் லட்சியம் செய்ய வில்லை. நாயக்கர் இம்மாதிரி பிரசாரம் செய்வார் என்று நாம் முன்னமே எதிர் பார்த்தோம். இதற்கு காரணம் வேறு இருக்கிறது" என்று எழுதுகிறார். அதிலிருந்து ஏதோ பூனைக்குட்டி வெளியாகப்போகிறது. அக்காரணத்தை வெகு ஆசையோடு வரவேற்கிறோம். இம்மாதிரி ஒரு முக்கியமான காரணத்தை மூடி வைத்திருப்பது போன்ற கெட்ட குணம் வேறு ஒன்றும் இல்லை என்றே சொல்லுவோம். ராமசாமி நாயக்கர் எப்பொழுது தன்னைத்தவிர வேறு யாருக்கும் பார்ப்பனரல்லாதார் இயக்கத்தில், முன்னேற்றத்தில் அக்கரை இல்லை என்று சொன்னார் என்பதை ரூபித்தாவது சொன்னாரானால் நன்மையாயிருக்கும். நாயக்கர் இம்மாதிரி பொய்ப் பிரசாரம் செய்வார் என்று எத்தனை வருஷமாக அல்லது எத்தனை நிமிஷமாக ஸ்ரீமான் நாயுடுவுக்கு தெரியும் என்பதையும் உலகத்துக்குத் தெரிவிப்பாரா?

தவிர, "நியாய வழியில் இதற்கு எல்லாம் நாம் என்னதான் சொன்னாலும் பொய் பிரசாரங்கள் நிற்கப் போவதில்லை. நமது கொள்கையை மட்டும் தெரிவிக்கும் பொருட்டு இவைகளுக்கு பதில் எழுதலாமென்று இருக்கிறோம். இம்மாதிரி பொய்ப் பிரசாரத்தின் நோக்கத்தை நண்பர்கள் அறிவார்கள் ஆதலால் இனி மேல் குடி பத்திரிகை எது எழுதிய போதிலும் அவைகளை நாம் கவனிக்கப்போவதில்லை" என்று எழுதுகிறார். இதிலிருந்து, பதில் எழுதுவதாகவும் எழுதாமல் இருக்கப் போவதாகவும் அர்த்தம் படும்படி சமயம் போல் நடந்துகொள்ள இடமிருக்கும்படி வைத்துக் கொண்டார். ஆனாலும் ஸ்ரீமான் ராமசாமி நாயக்கரை பதில் எழுதுவதற்குத் தகுதி இல்லாத மாதிரி அவ்வளவு சாதாரண மனிதர் என்பதாக ஸ்ரீமான் வரதராஜுலு நாயுடு மதித்திருப்பாரானால் பார்ப்பனர்களைப் போல், வாயை மூடிக்கொண்டு தன் காரியத்தில் கண்ணாயிருக்கட்டும். பதில் சொல்லித் தீரவேண்டிய யோக்கியதை உடைய மனிதன் என்று நினைப்பாரானால் கண்டிப்பாய் பதில் சொல்லட்டும். இரண்டுமில்லாமல் சுவற்றுமேல் பூனை மாதிரி மாத்திரம் இனிக்கூடாது என்று கண்டிப்பாய் சொல்லுவோம். ஏனெனில் ஸ்ரீமான் வரதராஜுலு நாயுடுவுக்கும் ராமசாமி நாயக்கருக்கும் உள்ள "தகராரோ" "பொறாமையோ" "பொய்ப்பிரசாரமோ" மற்றும் ஏதுவோ அவர்கள் சொந்தக்காரியத்தைப் பொறுத்த

தா! பொதுக் காரியத்தை பொறுக்கா? என்பது வெளிப்படையாகி விட்டால் பிறகு அதைப்பற்றி கவலை இல்லை. தேசத்தின் பெயராலும், சமூகத்தின் பெயராலும் என்று சொல்லிக்கொண்டு ஏற்படுகிற போது அதை அலட்சியமாய் மூடிவைத்து விடுவது தேசத்திற்கும், சமூகத்திற்கும் கேடு சூழ்வதல்லாமல் துரோகம் செய்ததுமாகும் என்று வற்புறுத்துகிறோம்.

"சுதேசமித்திரன் எழுதியதிலிருந்து அது பிராமணீயத்தை ஆதரிப்பதாகவே தெரிகிறது..........சுதேசமித்திரன் கொள்கை இதுவாயிருந்தால் மித்திரன் மாத்திரமல்ல அக்கொள்கையை ஆதரிக்கிற எல்லோரையும் நாம் எதிர்த்தே தீருவோம்" என்று எழுதி இருக்கிறது.

இந்த எழுத்துக்களில் ஒரு எழுத்திலாவது ஏதாவது போக்கிப் பொறுப்பு இருக்கிறதா என்று அறிய விரும்புகிறோம். சுதேசமித்திரன் எழுத்து, கொள்கை ஆகியவைகள் ஸ்ரீமான் வரதராஜுலு நாயுடுவுக்கு இன்றுதான் தெரியவந்ததா? அதுவும் ஸ்ரீமான் வரதராஜுலு நாயுடு "சந்து வழியில் புகாமல் ராஜபாட்டையில் நடக்கட்டும்" என்று எழுதிய பிறகுதானா? இது எழுதாமல் வேறுமாதிரியாய் ஸ்ரீமான் நாயுடுவைப் புகழ்ந்து எழுதியிருந்தால் இப்போது கண்டுபிடித்த கொள்கை என்னவாயிருக்கும் என்பதைப்பற்றி நாம் எழுதவேண்டுமா? தவிர,

"ஸ்ரீமான் ராமசாமி நாயக்கர் அற்பத்தனமாக எழுதியுள்ள வார்த்தைகளைப்பற்றி நாம் ஒன்றும் கவனிக்கப்போவதில்லை" என்று எழுதியிருக்கிறார். அற்பத்தனத்தை கவனிக்காத—லட்சியம் செய்யாத பெருந்தன்மைக்காக யாவரும் சந்தோஷமடைய வேண்டியதுதான். ஆனால் அற்பத்தனத்தின் சத்தை எடுத்துக்கொண்டதாக ஒப்புக்கொண்டு அதற்கு சமாதானம் எழுதுகிறார்.

அதாவது அந்த அற்பத்தனத்தின் சாரம் சமென்னவென்றால் "ஜஸ்டிஸ் கட்சி ஒன்றுதான் பிராமணரல்லாதாருக்குப் பிரதிநிதியாய் விளங்குவது. அதன் கொள்கைகளையே பிராமணரல்லாதார் ஆதரிக்கிறார்கள். அதைத் தாக்குவது பிராமணரல்லாதாருக்குக் கெடுதி செய்வதாகும்" என்று நாம் சொல்லுவதாக எழுதியிருக்கிறார்.

ஆகவே இந்த சாரம்சத்தைக் கொண்ட வார்த்தைகள் அற்பத்தனமாய்ப் போய்விட்டதற்காக நாம் கொஞ்சமும் வெட்கப்படவில்லை, வெட்கப்படப்போவதுமில்லை.

மற்றபடி அதன் கீழ் "ஜஸ்டிஸ் கட்சி ஒன்றுதான் பிராமணரல்லாதாருக்கு பிரதிநிதி என்று சொல்லுவதை நாம் ஒருநாளும் ஒப்புக்கொண்டதும் இல்லை, ஒப்புக்கொள்ளப்போவதுமில்லை..........அதனுடைய ராஜீயக் கொள்கைகளை எப்பொழுதும் கண்டித்து வந்திருப்பது போலவே நாம் இப்பொழுதும் கண்டிக்கிறோம்" என்று எழுதி இருக்கிறார்.

ஸ்ரீ வரதராஜுலு நாயுடுவுக்குப் பார்ப்பனரல்லாதார் முன்னேற்றத்திற்காக வேறு என்ன கட்சி இருக்கிறது. எந்தக்கட்சியின் மூலமாவது என்ன செய்திருக்கிறார்? "ஜஸ்டிஸ்" கட்சி ஏற்பட்ட காலமுதற் கொண்டே அதை ஒழிக்க பார்ப்பனர் செய்த சூழ்ச்சியில் ஸ்ரீமான் வரதராஜுலு நாயுடுவும் கலந்து சென்னை மாகாண சங்கம் ஆரம்பித்தாரே அது என்னவாயிற்று? அதன் கொள்கைகள் இப்போது எங்கே போய் விட்டது? அன்றியும்,

"ஜஸ்டிஸ்" கட்சியில் ஸ்ரீமான் வரதராஜுலு நாயுடுவுக்குப் பிடிக்காத கொள்கை அல்லது திட்டம் என்ன இருக்கிறது?

"பார்ப்பனரல்லாதார் நன்மையை உத்தேசித்து நான் ஜஸ்டிஸ் கட்சியில் சேருவேன் என்று ஒரு காலத்தில் சொன்னாரே அப்பொழுது பார்ப்பனரல்லாதார் நன்மைக்கு வேறு கட்சிகள் இருப்பதாய் இவர் ஒப்புக்கொண்டிருப்பாரானால், ஏன் அதன் பெயர்களைச் சொல்லி அதில் சேருவதாகச் சொல்லி இருக்கக்கூடாது? சொல்லாவிட்டாலும் பார்ப்பனரல்லாதார் விஷயத்தில் அக்கரை இருந்தால் ஏன் அவைகளில் எதிலாவது சேர்ந்திருக்கக் கூடாது?

இவ்வளவும் இல்லாமல் வேறு ஒருவர் செய்வதையும் தடுக்கும் படியான சூழ்ச்சியிலும் கலந்து இருந்து விட்டு தன்னாலான கெடுதிகள் எல்லாம் செய்து பார்த்தும் ஒன்றும் பலிக்காமல் "ஜஸ்டிஸ்" கட்சி செல்வாக்காயிருக்கும் போது மேற்கண்டபடி அதில் சேருவதாகவும் சொல்லி "ஜஸ்டிஸ்" கட்சியார் யாரும் இவரை நம்பி கூப்பிடாமலும், சேர்க்காமலும் இருப்பதற்காக அதை வைத்துக் கொண்டிருப்பதனால் யார் பொறுத்துக்கொள்ளுவார்கள்? தவிரவும் "ஜஸ்டிஸ் கட்சியின் ராஜீயக்கொள்கை பிடிக்காததால் கண்டிக்கிறோம்" என்று எழுதுகிறார்? "ஜஸ்டிஸ்" கட்சியின் ராஜீயக்கொள்கை என்ன என்பதை இவரால் சொல்ல முடியுமா? ராஜீயக்கொள்கை தவிர மற்றதையாவது ஸ்ரீமான் வரதராஜுலு நாயுடு ஆதரித்திருக்கிறாரா? ஆதரிக்கிறாரா? ஆதரிக்கப் போகிறாரா? பார்ப்பனர்கள் வைதால் ஜஸ்டிஸ் கட்சியில் சேருவேன் என்று மிரட்டுவதும், "ஜஸ்டிஸ்" கட்சியார் வைதால் சுயராஜ்யக்கட்சி தான் தேசத்தில் யோக்கியமான கட்சி என்று சொல்லுவதும், இரண்டு பேரும் சட்டை செய்யாவிட்டால் இரண்டும் உபயோகமில்லை தேசீயக்கட்சி ஸ்தாபிக்கப் போகிறேன் என்பதும், மறுபடியும் "கொஞ்ச நாளையிலேயே கொள்கைகளை வைதேனே யொழிய ஆசாமிகளை வையவில்லை" என்பதும், மறுபடியும் கொஞ்ச நாளையிலேயே "ஆசாமிகளை வைகிறேனே ஒழிய கொள்கைகளைப்பற்றி குற்றம் சொல்லவில்லை" என்பதும், "ஏதோ ஒரு சமயம் அப்படி வைது இருந்தாலும் இப்பொழுது அவற்றை எல்லாம் மன்னிக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறேன்" என்பதும் ஆகிய மாதிரியில் இருக்கிறதே அல்லாமல் 10 நாளைக்கு சேர்ந்தாற் போல் ஒரு குறிப்பிட்ட கொள்கையோ, அபிப்பிராயமோ, திட்டமோ அமுலோ ஏதாவது தன்னிடம் இருப்பதாய்த் தெரியமாய்ச் சொல்லக்கூடுமா? "தமிழ்நாடு" தினசரி முதல் இதழுக்கும் பின் வந்த 4, 5 இதழ்களுக்கும் உள்ள வித்தியாசங்களைப்படித்தால் இந்த விஷயங்கள் யாருக்கும் புலப்பட்டு விடும். தவிர,

"ஸ்ரீமான் ராமசாமி நாயக்கரே தமது "குடி அரசி"ல் மற்றொரு பக்கத்தில் ஜஸ்டிஸ் கட்சியார் ராஜீயதிட்டங்களை விட்டுவிடவேண்டும் என்றும், சமூக திட்டங்களை மாத்திரம் வைத்துக்கொள்ளவேண்டும் என்றும், அப்படியானால் மாத்திரம் எல்லாப் பார்ப்பனரல்லாதாரும் ஜஸ்டிஸ் கட்சியில் வந்து சேரமுடியும் என்று எழுதியிருக்கிறார். இது ஒன்றே அவர் நம்மைப் பற்றி எழுதினது தவறு என்பதை ரூபிக்கப் போதுமானது" என்று ஸ்ரீமான் வரதராஜுலு நாயுடு எழுதி இருக்கிறார்.

"குடி அரசு" எங்கு இப்படி எழுதியிருக்கிறது என்பதை தயவு செய்து காட்டும்படி கேட்கிறோம். நாம் எழுதியிருப்பதை தப்பர்த்தப்படும்படியாய் திரித்துக் கூறுகிறார் என்றே சொல்லுவோம். நாம் எழுதி இருப்பது என்னவென்றால் ஜஸ்டிஸ் கட்சியார் காங்கிரசில் சேருவதானால் தேர்தல்களின் போது சங்கடமேற்படும், ஏனெனில் தேர்தலை உத்தேசித்துத்தான் காங்கிரசில் சேரவேண்டுமே ஒழிய வேறில்லை. அப்படி சேர்ந்த பிறகு காங்கிரசும் ஜஸ்டிஸ் கட்சியும் அபேக்ஷகர்களை நிறுத்தினால் காங்கிரசில் சேர்ந்த பார்ப்பனரல்லாதாருக்கு ஓட்டு செய்யும் விஷயத்தில் கஷ்டம் ஏற்படும், கட்சி ஏற்படும், என்பதையே முக்கியமாய் காட்டி தேர்தலுக்கு ஆசைப்படுகிறவர்களுக்கு எதாவது ஒரு ஸ்தாபனமிருக்கட்டும், ஜஸ்டிஸ் கட்சியை அரசாங்க உத்தியோகஸ்தர்களும் வந்து சேரும்படி சமூக இயக்கமாக்கி விடுங்கள் என்று சொன்னோமே அல்லாமல் ஸ்ரீமான் வரதராஜுலு நாயுடுவுக்காவது வேறு அரசியல்காரருக்காவது பிடிக்காத அரசியல் திட்டம் ஜஸ்டிஸ் கட்சியில் இருக்கிறது அதை எடுத்து விடுங்கள் என்று நாம் சொல்லவேயில்லை. "குடி அரசு" "இரண்டொருவர் தவிர மற்றவர்கள் வந்து சேருவார்கள்" என்று எழுதியதில் கூட அந்த இரண்டொருவரில் ஸ்ரீமான் வரதராஜுலு நாயுடுவையும் ஒருவராகக் கருதி தான் எழுதினோம். ஏனெனில் ஜஸ்டிஸ் கட்சியை வைதாலொழிய தனக்கு வேறு மார்க்கமில்லாத மாதிரியில் கொள்கைகளை வைத்துக்கொள்ள வேண்டியவராகி விட்டார் என்பதை உணர்ந்துதான். ஆதலால் குடி அரசு எழுதியதை ஸ்ரீமான் நாயுடு உபயோகித்துக்கொண்ட மாதிரி சரியா என்பது யாவருக்கும் விளங்காமல் போகாது. தவிர,

"ஜஸ்டிஸ் கட்சி ராஜீய திட்டத்தை விட்டு விட்டால் சமூக வேலை சம்பந்தப்பட்ட வரை எல்லாப் பார்ப்பனரல்லாதாரும் அதில் சேருவார்கள் என்பதில் சந்தேகமில்லை" என்று எழுதுகிறார். மற்றவர்கள் சேருவார்களா சேர்ந்திருக்கிறார்களா என்கிற விஷயம் பிறகு பேசலாம். ஸ்ரீமான் வரதராஜுலு நாயுடு சேருவதற்கு ஆக்ஷேபனை இல்லையா என்று கேட்கிறோம்.

அப்படியானால் காஞ்சீபுரம் மகாநாட்டின் போது கூட்டப்பட்ட கூட்டத்தில் ஏன் இவர் ஸ்ரீமான் சீனிவாசய்யங்காருக்கு

(இதன் தொடர்ச்சி 13ம் பக்கம் பார்க்க)

அகில இந்திய நாயுடு மஹாநாடு கோயமுத்தூர்.

கோயமுத்தூர் வெரைட்டி ஹாலில் அகில இந்திய நாயுடு கான்பரன்ஸ் ஏப்ரல் மாதம் 15, 16, 17, வெள்ளி சனி ஞாயிற்றுக்கிழமைகளில் ஆடம்பரமாகவும் ஊக்கமாகவும், என்றுமில்லாத உணர்ச்சியுடனும் நடந்து அநேக முக்கிய தீர்மானங்களுடன் பல அற்புத பிரசங்கங்களும் நடந்தன. அதன் விபரம்:—

15-தேதி காலை மதராஸ் மெயிலில் வரவேற்புத் தலைவர் ஸ்ரீமான் திவான் பகதூர் பி. வி. என். எதிராஜுலு நாயுடு அவர்களும், மஹாநாட்டுத் தலைவர் சர் கே. வி. ரெட்டி நாயுடுகாரு அவர்களும், ஸ்ரீமான்கள் ஜே. எஸ். கண்ணப்பர், ஆரியா, [illegible] வேணு கோபால் நாயுடு, மதன கோபால நாயுடு, ராமானுஜ நாயுடு, விஜயராகவலு நாயுடு, பளிஜா பற்றிப் 10, 20 பிரதிநிதிகளும், மற்றும் சேலம், கிருஷ்ணகிரி, காவேரிப்பட்டணம், திருப்பத்தூர் தஞ்சை, கும்பகோணம், மதுரை, திருச்சினாப்பள்ளி, திருநெல்வேலி முதலிய ஜில்லாக்களிலிருந்தும், சுமார் 250 பிரதிநிதிகள் வழியிலும் கோயமுத்தூர் ஜில்லாவிலிருந்து அநேக பிரதிநிதிகளும் வந்தார்கள். பிரதிநிதிகளை வரவேற்க வரவேற்புக் கமிட்டியார் தொண்டர்களுடன் மேளதாளத்துடன் ஸ்டேஷனுக்குச் சென்று வரவேற்று எதிர்கொண்டு அழைத்துச் சென்றார்கள். கோயமுத்தூர் பிளாட் பாரத்திற்கு வண்டி வந்ததும் பெருத்த கரகோஷத்தினிடையே, உற்சாகத்துடன் வரவேற்று வந்திருந்த முக்கியஸ்தர்களுக்கெல்லாம் மாலையிட்டு தலைவருக்கு தம்மலை நாயுடு சங்கத்தார் உபசாரப் பத்திரம் வாசித்துக் கொடுக்கப்பட்டு பின்னர், பாண்டு வாத்தியங்களுடனும், மேளவாத்தியங்களுடனும் ஊர்வலமாக வெரைட்டி ஹாலுக்குச் சென்று, அங்கு மஹாநாடு 10-மணிக்குத் துவக்கப்பட்டது. மஹாநாட்டுக்கு சுமார் 600, 700 பிரதிநிதிகளும் 300, விசிட்டர்களும், வந்திருந்தார்கள். உள்ளூர் பிரமுகர்களில் முக்கியமானவர்கள் ஸ்ரீமான்கள் வெரிவாடு செட்டியார், எம். சம்பந்த முதலியார், வி. எஸ். இரத்தினசபாபதி முதலியார், ஆர். கே. ஷண்முகஞ் செட்டியார், எம். வேணுகோபால் பிள்ளை, வி. எஸ். செங்கோட்டையா, கோபால பிள்ளை, வி. எம். இராமச்சந்திரஞ் செட்டியார் டி. எஸ். சிவசுப்பிரமணியஞ் செட்டியார், வி. அருணாசலஞ் செட்டியார், பொன்னே கவுண்டர், ப. கிருஷ்ணசாமி பிள்ளை, ஏ. ஆர். சிவானந்தம் முதலிய உள்ளூர் பிரமுகர்களும் வந்திருந்தார்கள். ஸ்ரீமான்கள் பி. எஸ். ஜி. அண்டு சன்ஸ் வெங்கிடுசாமி நாயுடு அவர்களால் கடவுள் வணக்கம் சொல்லப்பட்டு, இ. புருஷோத்தம நாயுடு அவர்களால் மஹாநாடு திறக்கப்பட்டு, பெருத்த கரகோஷத்தினிடையே ஸ்ரீமான் திவான் பகதூர் பி. வி. என். எதிராஜுலு நாயுடு அவர்கள் தமது வரவேற்பு உபந்நியாஸத்தைப் படித்தார். அது முடிந்தவுடன், தலைவர் சர் கே. வி. ரெட்டி நாயுடு அவர்கள் வாய்மொழியாகவே சுமார் ஒரு மணி நேரம் முகவுரை பிரசங்கம் செய்து முடித்ததும், விஷயாலோசனைக் கமிட்டி மாலை 3-மணிக்குக் கூடுமென்று சொல்லி, மஹாநாட்டை ஒத்திவைத்து விட்டார்.

மாலை 3-மணிக்கு விஷயாலோசனைக் கமிட்டி கூடி அநேக தீர்மானங்களை மஹாநாட்டில் பிரேரேபிப்பதற்காக முடிவு செய்து கொண்டு மாலை 5-மணிக்கு கூட்டம் கலைந்தது. அக்கிராசனர் மஹாநாட்டுக்கு ஸ்திரீகள் வரவில்லை என்று வருத்தப்பட்டுக் கொண்டதோடு மறுநாள் வர வேண்டுமென்று கேட்டுக்கொண்டார். மறுநாள் காலையில் அநேக ஸ்திரீகள் வந்திருந்தார்கள். 16-ந்தேதி காலையிலும் மாலையிலும் அநேக தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. மறுநாள் காலை லண்டன் மிஷன் பள்ளிக்கூடத்தில் முக்கியமானவர்களுடன் ஒரு பந்திப் படையல் நடந்த பிறகு வெரைட்டி ஹாலில் மஹாநாட்டை ஆரம்பித்து பல தீர்மானங்கள் நிறைவேற்ற அக்கிராசனர் முடிவுரையுடனும், மஹாநாடு முடிவு பெற்றது.

ஒரு விசேஷம்.

மஹாநாட்டில் நடந்த பல முக்கிய தீர்மானங்களுள் நாயுடு சமூகத்திலிருந்து அன்னிய மதத்திற்குச் சென்றவர்கள் மறுபடியும் தமது சமூகத்திற்கு வருவதாயிருந்தால் ஏற்றுக் கொள்ள வேண்டுமென்றும், மற்று மதம் மாறினவர்களும் நமது சமூகத்திற்கே சேர்த்துக் கொள்ளப்படத் தக்கவர்கள் [illegible] பிரசாரம் செய்ய வேண்டுமென்றும் தீர்மானிக்கப்பட்டது. தீர்மானம் ஆனவுடன் அக்கூட்டத்திலிருந்த ஒரு கிருஸ்தவ நாயுடு கனவான், தான் நாயுடு சமூகத்துக்கு வந்து விடுவதாக தெரியப்படுத்திக் கொண்டவுடன், இந்த கூட்டத்தில் அவரை நமது சமூகத்தில் சேர்த்துக் கொண்டதாக விளம்பரப்படுத்த வேண்டுமென்று ஸ்ரீமான் ஈ. வெ. ராமசாமி நாயக்கர் அக்கிராசனர் அவர்களைக் கேட்டுக் கொண்டார். அக்கிராசனர் அவர்கள் அதைப் பற்றி கூட்டத்திலுள்ள ஆண் பெண் இருபாலர்களுடைய சம்மதத்தையும் கேட்டார். எல்லோரும் சம்மதம் கொடுத்ததும், ஒரு கனவான் அவரை நமது சமூகத்தில் சேர்த்துக் கொள்ளுவதில் எவ்விதமான ஆக்ஷேபணையுமில்லை யென்றும், ஆனால் முறைப்படி பிராயச்சித்தம் செய்து சேர்த்துக் கொள்ள வேண்டுமென்று சொன்னார். ஸ்ரீமான் நாயக்கர் பிராயச்சித்தமென்கிற முறையை பலமாகக் கண்டித்து, பிராயச்சித்தமென்பது பார்ப்பனர்களுக்குப் பணம் கொடுப்பதைத் தவிர வேறொன்றும் அதிலில்லை யென்றும், நமது பணம் வீணாவதுமல்லாமல் பார்ப்பனன் உயர்ந்தவன் என்பதையும் நாம் அவனுக்கு அடிமை என்பதும் ஒப்புக்கொள்வதாகிறது என்றும், ஆகையால் இவரை நாம் சேர்த்துக் கொள்ளுகிற நல்ல காரியத்தை விட பிராயச்சித்தம் செய்து கொள்வதன் மூலம் நமது சமூகத்திற்கு அதிகமான கெடுதலைச் செய்தவர்களாவோமென்றும் சொன்னதின் பேரிலும், தலைவர் அவர்கள் ஜனங்களின் சம்மதத்தைக் கேட்டு ஏகமனதாய் சம்மதம் தெரிந்ததும், தான் அவரை நமது சமூகத்தில் சேர்த்துக்கொண்டதாக வெளிப்படுத்தினார்.

மற்றொரு விசேஷம்.

வரவேற்பு அக்கிராசனர் தமது உபந்நியாசத்தைப் படித்துக்கொண்டு வரும்பொழுது நாயுடு சமூகம் நான்கு வகுப்புக்களில், க்ஷத்திரிய வகுப்பைச் சேர்ந்தவர்கள் என்று சொன்னவுடனே, அங்குள்ள பலர் அதை ஏற்றுக்கொள்ள இஷ்டமில்லாமல், அல்லவென்று சொன்னார்கள். மறுபடியும் சமயத்திலேயும், ஒரு தீர்மானத்தைப் பிரேரேபிக்கும் போது, க்ஷத்திரியர்களாகிய நாமென்று ஆரம்பித்ததும் ஸ்ரீமான் [illegible]ரியா, நாயக்கர், முதலானவர்கள் அதை ஆக்ஷேபித்து க்ஷத்திரியா என்று சொல்லிக் கொள்வதால் நமக்கு மேல் பிராமணர் என்று ஒரு கூட்டம் இருப்பதாக நாமே ஒப்புக்கொண்டவர்களாகிறோம் என்றும், நமக்குக் கீழ் சில மக்களிருப்பதாகச் சொல்லுபவர்களாகிறோமாதலால் மக்களுடைய பிறவி [illegible] முறை [illegible] சொன்னதின் பேரில் அங்குள்ள [illegible].

இன்னுமொரு விசேஷம்.

மஹாநாடு [illegible] நாயுடு மகா சமூகத்தின் முன்னேற்றத்திற்கும், சீர்திருத்தத்திற்கும் ஒன்றே கூட்டப்பட்ட போதிலும், பொதுவாக அங்கு நடந்த நடவடிக்கைகளும், தீர்மானிக்கப்பட்ட தீர்மானங்களும், அவற்றை பிரேரேபித்து ஆதரித்தும் பேசப்பட்ட உபந்நியாசங்களும், பெரும்பாலும், பார்ப்பனியக் கொடுமைகளைக் கண்டிப்பதாகவும், அவர்களுடைய சூழ்ச்சிகளையும், அக்கிரமங்களையும் வெளிப்படுத்துவதாகவும் இருந்ததோடு அவர்களை உயர்ந்தவர்கள் என்று நினைப்பதும் அவர்களை, குருக்களென்றும், ஆசாரியர்களென்றும் சொல்லிக் கொண்டு அவர்களுக்குப் பணம் கொடுத்து அவர்களை வணங்கி வந்ததும், பெரிய அறிவீனமென்று உணர்த்தக் கூடியதாகவும், பொதுவாக பார்ப்பனரல்லாதார்களின் கீழ் நமது மக்களை மதிப்பிக்கச் செய்வதே நமது சமூகத்திற்கே பெரிய கேடு என்பதாகவும், எல்லோரும் உணரும்படியாயிற்று.

மஹாநாட்டில் நிறைவேறிய முக்கிய தீர்மானங்களாவன: சாவகல்யாண மசோதாவைப் பற்றியும், [illegible] சன் அவர்கள் செய்த தீர்மானத்தைப் பற்றியும், நாயுடுமார் சமூகத்திலுள்ள எல்லா உட்பிரிவுகளும் ஒன்றுசேர வேண்டுமென்பது பற்றியும் விதவா விவாகத்தைப் பற்றியும், விவாக காலங்களில் அதிகமான பணச் செலவுகளும், அதிக நாள் செலவும் செய்யாமல் சுருக்கமான செலவில் ஒரு நாளிலேயே முடித்துவிட வேண்டுமென்பது பற்றியும், நாயுடு வாலிபர்கள் உபாத்தியாயர் தொழில் அதிகமாக எடுத்துக்கொள்ள வேண்டுமென்பது பற்றியும், நாயுடு மாணவர்க்கு உபகாரச் சம்பளமும், வெளிநாடு

திருநெல்வேலி ஜில்லாவில் ஸ்ரீமான் திருகூட சுந்தரம் பிள்ளை அவர்களின் கதர் பிரசாரம்.

ஸ்ரீமான் பொ. திருகூட சுந்தரம் பிள்ளை அவர்கள் 14—4—27-உ மாலை குலசேகரன் பட்டினத்திற்குச் சென்று கதர் பிரசார விஷயமாய் அங்குள்ள பிரமுகர்களைக் கண்டு பேசினார். மறுநாட் காலையில் அங்குள்ள பண்டாரசிவ ஞாபகச் சின்னப் பள்ளிக்கூடத்தில் சிறுவர்கள் கைக்கதிரில் நூல் நூற்பதைப் பார்வையிட்டனர். சிறுவர்கள் நூற்க ஆரம்பித்து இரண்டு மாதங்கள் தானாகின்றன. முதல் மாதத்தில் சராசரியாக 12-நெருக்குக் குறையாமல் நூற்றிருந்

குப் போய் வாசிக்க ஒரு சிறு கிடைக்கப்பட வேண்டுமென்பது பற்றியும், அன்னிய மதத்திற்குச் சென்றவர்களை மறுபடியும் தம் மதத்திற்குச் சேர்த்துக் கொள்ள வேண்டுமென்பது பற்றியும், நூல் நூற்றலை ஆதரவு செய்தல், கதர் உடுத்தல் முதலியவைகளுக்காக குடிசைத் தொழிலை ஆதரித்தும், தீண்டாமை விலக்கைப் பற்றியும், மதுவிலக்கைப் பற்றியும், தேவதாசி விலக்கைப் பற்றியும், பெண் கல்வி அபிவிருத்தியைப் பற்றியும், உத்தியோகம் கிடைக்க வேண்டும் என்பது பற்றியும், தாய் பாஷையை ஆதரிக்கவேண்டும் என்பது பற்றியும், காபு வாலிபர்கள் பார்ப்பனரல்லாத வாலிபர் சங்கத்தில் சேரவேண்டுமென்பது பற்றியும், தீர்மானங்கள் நிறைவேறின. இத்தீர்மானங்களின் மேரில ஸ்ரீமான்கள் சர். கே. வி. ரெட்டி நாயுடு, மதன கோபால் நாயுடு, ஆரியா, கண்ணப்பர், ஈ. வெ. ராமசாமி நாயக்கர், அவ்வை மன்னப்பா ஸ்ரீமதி நாகம்மாள், பண்டிதர் அ. கிருஷ்ணசாமி நாயுடு, எஸ். பி. வேணுகோபால நாயுடு, பட்டுக்கோட்டை அழகிரிசாமி நாயுடு, வெங்கனூர் பலிஜா, சந்தான கிருஷ்ண நாயுடு, ஹனுமந்தராவ் நாயுடு, கோவிந்தராஜுலு நாயுடு, சுந்தரராம நாயுடு, தினதயாளு நாயுடு, பி. வி. சுந்தரராஜுலு நாயுடு, வேணுகோபால நாயுடு, ஸ்ரீமதி மீனாக்ஷியம்மாள், நாராயணசாமி நாயுடு, பி. எஸ். ஜி. வெங்கிடசாமி நாயுடு, இன்னும் பல கனவான்களும் பேசினார்கள்.

அக்கிராசனர் அவர்களுடைய முடிவுரையானது மக்களுக்கு புதிய உணர்ச்சியைக் கொடுத்தது. ஸ்ரீமான் ஈ. வெ. ராமசாமி நாயக்கர் முதலியோர் பேசினது அங்குள்ள மக்களுக்கு சுயமரியாதையின் சிறப்புரிமையைபதை விளக்கியதோடு, அங்குள்ள மக்களின் ரத்தத்தையே சுத்தப்படுத்தியது என்றே சொல்லலாம். அங்கு வந்திருந்த பெரும்பான்மையான ஸ்திரீகளுக்கும் பார்ப்பனீயப் புரட்டுகள் வெளியாக்கி, சுயமரியாதை உணர்ச்சியும் உண்டாக்கிற்று. இன்னும் ஒவ்வொருவருடைய பேச்சும் தக்க பலனை அளித்தன. மகாநாட்டுக்கு மலையாள தேசத்திலிருந்து ஸ்ரீ நாராயண குரு ஸ்வாமிகளின் பிரதம சிஷ்யரான ஸ்ரீ போதானந்த சுவாமிகளும், ஸ்ரீ டாக்டர் [illegible] ம, பரமேஸ்வர மேனனும் மற்றவர்களும் வந்திருந்தனர். மகாநாடு வெகு சிறப்புடன் நடந்தேறியது.

கின்றனர். அதைக் கொண்டு சமீபத்திலுள்ள கிராமத்தில் துணி நெய்யப்பட்டு வருகின்றது. இப்பொழுது பாலர் வகுப்பு 5, 6 வயதுச் சிறுவர்களுங்கூட 18-நெருக்குக் குறையாமல் நேர்த்தியாக நூற்கின்றனர். சிறுவர்கள் தெருவில் பள்ளிக்கூடத்திற்குப் போகும்போதும் வரும்போதும் கைக்கதிரில் நூற்பது தேவர்கள் கண்டு களிக்கும் காட்சியாகும்.

அன்றிரவு 9-மணிக்கு வடக்கூர் கோவில் முன்பு கூடிய பொதுக்கூட்டத்தில் ஸ்ரீமான் பிள்ளையவர்கள் கதர் விஷயமாய்ப் பேசினார். பேசிமுடிந்ததும் ஸ்வாமி ஊர்வலம் வர ஏற்பாடாயிருந்தபடியால் பிரமுகர்களில் ஒருவராகிய ஸ்ரீமான் சி. ராமனுஜம் பிள்ளையவர்கள் வாகனம் தூக்குபவர்களுக்கெல்லாம் கதர் வாங்கிக் கொடுத்தனர். ஸ்வாமிக்கும் அம்மனுக்கும் கதர் வாங்கிக் கொடுத்து அணிவித்தனர்.

மறுநாள் மாலை 5-மணிக்கு பண்டகசாலை முன்பு ஹிந்துக்களும் மகமதியர்களும் கூடிய பொதுக் கூட்டத்தில் ஸ்ரீமான் பிள்ளையவர்கள் கதர், மத ஒற்றுமை, தீண்டாமை விலக்கு முதலிய விஷயங்களைப் பற்றி பேசினார். பலர் இனி கதரே வாங்கி அணிவதாக ஒப்புக்கொண்டனர். அப்பொழுதே சிலர் கதர் வாங்கியணிந்தனர்.

15, 16, 17-உ களில் ஸ்ரீமான்கள் திருகூட சுந்தரம் பிள்ளையவர்களும், 'உதயபாரதி' ஆசிரியர் ஸ்ரீமான் ப. ராமஸ்வாமி அய்யங்காரவர்களும் அங்குள்ள பிரமுகர்களின் உதவியைக் கொண்டு தெருக்களில் கதர் கொண்டுபோய் ரூபாய் 250க்கு விற்றனர். இன்னும் ஏராளமாய் விற்றிருக்கும். ஆனால் கையில் கதர் இல்லை. மறுபடியும் கதர் கொண்டுவரும்படி பலரும் கேட்டுக்கொண்டிருக்கின்றனர்.

அவ்வூரிலுள்ள வேளாளர் திலகமாகிய ஸ்ரீமான் செந்தில் ஆறுமுகம் பிள்ளை அவர்கள் சென்ற 2, 3 வருஷமாய் எங்கிருந்தாலும் எங்கு போனாலும் நாள் தவறாமல் நூல் நூற்று வருகின்றனர். அவர்கள் நூற்ற நூலைக் கொண்டு துணி நெய்து கோயிலிலுள்ள [illegible] நாயகன்மாருக்கும் பரிவட்டம் அணிவித்திருக்கின்றனர். அவர்களுக்கும், ஸ்ரீமான்கள் டி. என். தம்பளர்க்க நாயகம் பிள்ளை அவர்கள், சி. ராமனுஜம் பிள்ளை அவர்கள் முதலிய பிரமுகர்களுக்கும் குலசேகரன் பட்டணத்திலேயே கதர் உற்பத்தி செய்ய வேண்டுமென்பது விருப்பம். கூடிய சீக்கிரத்தில் வேண்டிய ஏற்பாடுகள் செய்யப்படும் என ஸ்ரீமான் ப. ராமஸ்வாமி எழுதுகிறார்.

கொங்குமண்டல கற்பூரச் செட்டியார்களென்ற நாயக்கமார்களின் கூட்டம்:—29-4-27-உ காலை 9-மணிக்கு ஈரோடு தாலூகா வீரப்பன் சத்திரத்தில் ஸ்ரீமான் எம். எஸ். முத்துக்கருப்பஞ் செட்டியார் அவர்கள் அக்கிராசனத்தின் கீழ் நடைபெறும். அது சமயம் ஈரோடு ஸ்ரீமான் ஈ. என். வெங்கிட்ட பெருமாள் நாயுடு அவர்களும், மேற்படி நாயக்கன் மார்களின் குரு ஸ்வாமிகளும் உபந்நியாசிப்பார்கள். பிறகு ஷை நாயக்கன்மார்கள் மகாநாடு ஒன்று நடத்த அக்கிராசனர் தெரிந்தெடுத்தலும் மகாநாடு நடத்த ஒரு நாள் குறிப்பிடுதலும் நடைபெறும்.

போளூர் தாலூகா ஆரம்பாசிரியர்கள் இரண்டாவது மகாநாடு:—24—4—27-ந் தேதி காலை 7-30 மணிக்கு போளூரில் ஸ்ரீமான் ஈ. வெ. ராமசாமி நாயக்கர் அவர்கள் அக்கிராசனத்தின் கீழ் போளூர் தாலூகா ஆரம்பாசிரியர் 2-வது மகாநாடு கூடும்.

போளூர் திராவிட சங்க முதலாவது ஆண்டு விழா:—24-4-27-தேதி போளூர் திராவிட சங்க முதலாவது ஆண்டு விழா ஸ்ரீமான் ஈ. வெ. ராமசாமி நாயக்கர் அவர்கள் அக்கிராசனத்தின் கீழ் நடைபெறும். அது சமயம் "தேசிய நிலைமை", "சங்க முன்னேற்றம்", "ஒற்றுமை" "மதுவிலக்கு", "கதர் அபிவிருத்தி" முதலிய விஷயங்களைப் பற்றி முறையே ஸ்ரீமான்கள் கண்ணப்பர், ஆரியா, ம. ரா. குமாரசாமி பிள்ளை, பு. முருகேச முதலியார், ஆ. தா. ரங்கசாமி நாயக்கர் முதலிய அறிஞர்களால் உபந்நியாசம் நடைபெறும்.

ஆரணி சமரச சன்மார்க்க சங்க மகாநாடு:—நாளது ஏப்ரல் மாதம் 27, 28, 29 தேதிகளில் ஆரணி திருநாவுக்கரசு மடாலயத்தில் திருப்பாதிரிப் புலியூர் ஸ்ரீலஸ்ரீ ஞானியார் மடாலயத்து குரு மஹா சன்னிதானம் அக்கிராசனத்தின் கீழ் 10-வது வருஷ குரு பூஜை மஹோத்சவம் நடைபெறும். அந்நாட்களில் சைவத் தாய்மார் மணிவாசகர், வாலி மோக்ஷம், திருஞான சம்பந்தர், திருவள்ளுவர், விபூஷண சரணாகதி, சந்திரரும் அவா செந்தமிழும், என்னும் விஷயங்கள் பற்றி முறையே திருவாளர்கள் மு. நடேச முதலியார், நா. மு. வெங்கிட்டசாமி நாட்டார், மோ. வே. கோவிந்தராஜ அய்யங்கார், நா. மு. வெங்கிட்டசாமி நாட்டார், மு. நடேச முதலியார், மோ. வே. கோவிந்தராஜ அய்யங்கார் முதலிய அறிஞர்கள் உபந்நியாசிப்பார்கள்.

தெலுக்கான்ஸன்.

F. M. S.

போர் இந்து மகாஜன சங்கம்.

ஏப்ரல் மாதம் 16, 17 தேதிகளில் இந்து மகாஜன சங்கம் முதல் வருஷ நிறைவு விழா பாரிஸ் ஸ்ரீமான் எஸ். வீராசாமி அவர்கள் அக்கிராசனத்தின் கீழ் நடைபெறப் போவதாகவும், அது சமயம் இந்தியா கவர்ன்மெண்ட் ஏஜண்டு ஸ்ரீமான் ராவ் சாஹிப் ப. சுப்பைய நாயுடு அவர்கள் மகாநாட்டுக்கு விஜயம் செய்வார்களென்றும் ஸ்ரீமான்கள் அற்புதானந்த சுவாமி, வித்தியானந்த தயாராம், சட்டப்பசிவா, வி. சுப்ரமண்ய, சர். மா. ரெ. ர. ரங்கசாமி, சி. சுப்பையா, ரே. ர. ஐயாரு முதலிய கனவான்கள் உபந்நியாசம் செய்வார்களென்றும், சமூக சீர்திருத்தம், கல்வி, மதுவிலக்கு, இந்து கல்யாண சட்டம், பிரசாரம், முதலிய விஷயங்களைப் பற்றி தீர்மானங்கள் நடைபெறுமென காரியதரிசி ஸ்ரீமான் ரெ. ர. ஐயாரு தெரிவிக்கிறார்.

நாடார் மகாஜன சங்கம்:—30-4-27 தேதி மாலை 4-மணிக்கு மேற்படி சங்கக் கவுன்சில் ஸ்பெஷல் மீட்டிங் மதுரையில் சங்க ஆபீஸில் நடைபெறும். அதுசமயம் மூன்று மாதத்திய வரவு செலவு ரிபோர்ட்டு, கட்டடம் வாங்க நியமித்த கமிட்டி ரிபோர்ட்டு, 25, 26, 27 வருஷங்களின் கணக்குகளை பரிசோதிக்க ஆடிட்டர்களை நியமிக்க முதலிய பல விஷயங்கள் கவனிக்கப்படுவதோடு காரியதரிசிகளாலும், அங்கத்தினர்களாலும், சட்டப்படி கொண்டுவரப்படும் தீர்மானங்களும் கவனிக்கப்படும் என்று சங்கக் காரியதரிசிகளான ஸ்ரீமான்கள் பா. ம. பாண்டிய நாடார், ஆறுமுக நாடார் அறிவிக்கிறார்.

ஒரு சிறு குறிப்பு

சென்னையில் உள்ள முக்கிய வைத்தியர்களில் அனுபவம் பெற்ற இரண்டு கனவான்கள் நமது உடல் நிலையைப் பற்றி கவனித்து சரீரத்தில் ரத்த ஓட்ட வேகம் (Blood preasure) அதிகமாயிருப்பதாகவும், சுமார் 150 டிக்கிரி பிரஷர் இருக்கவேண்டியது 200 டிக்கிரி போல் இருப்பதாகவும், இது மேலும் மேலும் கூடுதலாகிக்கொண்டு வருமானால் ரத்தக் குழாய்கள் வெடித்து ரத்த ஓட்டம் நின்று கால் கை அலசாது மூளை முதலியதுகள் ஸ்தம்பித்துப் போகுமென்றும் அபிப்பிராயம் சொல்லி, அதற்கு சிகிச்சையாக குறைந்தது இரண்டு தடவை மூன்று மூன்று நாட்கள் முழுப்பட்டினி இருக்கவேண்டுமென்றும், இராத்திரிச் சாப்பாட்டை குறைத்து விடவேண்டும் என்றும், மாமிச ஆகாரத்தை அறவே நீக்கி விட வேண்டும் என்றும், கண்டிப்பான சிகிச்சை சொல்லியிருக்கிறார்கள். ஸ்ரீலஸ்ரீ கைவல்ய சுவாமிகளும் இதற்கு முன்பே இதே அபிப்பிராயத்தை இரண்டு மூன்று தடவைகளில் சொல்லியிருக்கிறார். அன்றியும் நமக்கும் சரீரத்தில் முன்னைவிட எடை அதிகமாயிருந்தாலும், அதிகமான பலக்குறைவும் மூச்சுவாங்குதலும், அரைமணி நேரம் சேர்ந்தாப்போல் எழுத முடியாதபடி அடிக்கடி சோம்பலும் கைவலியும் பேசப் பேச மறதியும் முதலிய குணங்கள் ஏற்பட்டிருக்கின்றன. வைத்தியரிடம் பட்டினி இருப்பதாய் ஒப்புக்கொண்டு வந்திருந்தாலும், தற்சமயம் ஏற்பட்டிருக்கும் இரண்டொரு சம்பவங்களை முன்னிட்டு கொஞ்ச நாளைக்கு பட்டினி விரதமெடுத்துக்கொள்ள சௌகரியமில்லாமலிருப்பதால் வைத்தியருக்குக் கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்ற முடியாத நிலைமையிலிருக்கிறோம். ஆனாலும், ஆகார விஷயத்தில் வைத்தியர் கட்டளைப்படி நடக்க முடிவு செய்து கொண்டிருப்பதால் மாமிச ஆகாரம் சாப்பிடுவதை நிறுத்தியிருக்கிறோம். ஆகையால் வெளிகளில் நம்மைக் கூப்பிடும் கனவான்கள் தயவு செய்து இந்த விஷயங்களை மாத்திரம் கவனித்துக்கொள்ள வேண்டுமாய்ப் பிரார்த்திக்கிறோம்.

ஈரோடு தாலூகா கணபதிபாளையம் ஸ்ரீ வாகீச சைவ சித்தாந்த சன்மார்க்க சபை:- நான்காம் ஆண்டு விழா நாளது ஏப்ரல்-மீ 27, 28 தேதிகளில் யாழ்ப்பாணத்து வண்ணை நகர் திருவாளர் சுவாமி நாத பண்டிதர் அவர்கள் தலைமையின் கீழ் நடைபெறும். அவ்வமயம் வேடன் சிவ பூஜை கண்டுபிடித்த சரித்திரம், சிவசாதனம், கண்ணப்பர், அஞ்சுவஞ்சாமை, உழவு, கொல்லாமை, அப்பரும் அவர் அருள் மொழியும் என்பது பற்றி முறையே திருவாளர்கள் நாகரத்தினம் செட்டியார், சிவ தருநாகம் பிள்ளை, தெய்வசிகாமணிக்கவுண்டர், C K சுப்பிரமணிய முதலியார், அ. கந்தசாமி பிள்ளை, சிவ குருநாதம் பிள்ளை, அ. மு. சரவண முதலியார் ஆகியவர்களால் உபந்நியாசங்கள் நடைபெறும் எனச் சபையார் அறிவிக்கிறார்கள்.

சுயராஜ்யம் வாங்கித்தர அய்யங்காரின் புதுவழி

ஸ்ரீமான் எஸ். சீனிவாசய்யங்கார் சுயராஜ்யம் வாங்கிக் கொடுக்க மற்றொரு புது வழி கண்டுபிடித்திருக்கிறார். அது என்னவென்றால், சென்னையில் 2 லக்ஷ ரூபாய் வசூலித்து ஒரு லட்சத்தில் காங்கிரஸ் நடத்திவிட்டு ஒரு லக்ஷம் பிரசாரத்திற்கு செலவு செய்தால் சுயராஜ்யம் வந்துவிடுமாம். முதலில் சென்னை முனிசிபாலிடியை பார்ப்பனரைப் பற்றினால் சுயராஜ்யம் வந்து விடும் என்று சொன்னார். ஸ்ரீமான்கள், கல்யாணசுந்தர முதலியார், வரதராஜுலு நாயுடு, ராமசாமி நாயக்கர், ஆரியா முதலியவர் காங்கிரசை விட்டு விலகி அதைப் பரிசுத்தப் படுத்திவிட்டால் சுயராஜ்யம் வந்து விடுமென்று சொன்னார். பிறகு சட்டசபையைக் கைப்பற்றி விட்டால் சுயராஜ்யம் வந்துவிடுமென்று சொன்னார். பிறகு ஜஸ்டிஸ் கட்சி ஆதிக்கத்தை ஒழித்து விட்டால் சுயராஜ்யம் வந்துவிடுமென்று சொன்னார். இவ்வளவும் செய்தும், பார்த்தும் வருகிறார். செய்தாய் விட்டதாகவும் சொல்லிக் கொள்ளுகிறார். ஆனால் இன்னமும் சுயராஜ்யம் வந்தபாடில்லை. ஆதலால் இப்போது புதிதாக ஒரு வழி கண்டு பிடித்திருக்கிறார் அதாவது சென்னை நகரில் காங்கிரஸ் நடத்திக் காண்பித்து விட்டால் சுயராஜ்யம் வந்து விடும் என்று சொல்லியிருக்கிறார். அதை நம்பி நமது ஆசாமிகள் பணம் கொடுக்கத்தான் போகிறார்கள். அதற்கும் நமது பத்திரிகைகளும் ஆள்களும் பிரசாரம் செய்யத்தான் போகின்றன. ஸ்ரீமான் அய்யங்கார் எவ்வளவு பொய் பேசியிருந்தாலும் எவ்வளவு திட்டியிருந்தாலும் எவ்வளவு மோசம் செய்திருந்தாலும் நேரில் வந்து உனக்கு அது தருகிறேன் இது தருகிறேன் உன்னை அப்படிச் செய்கிறேன் இப்படிச் செய்கிறேன் என்று சொன்னவுடன் எல்லாம் மறந்து போய் நிமிஷ நேரத்தில் அய்யங்காருக்கு குலாமாய் ஆய்விடுகிறார்கள். பணம் படைத்த முட்டாள்கள் அள்ளி அள்ளி கொடுக்கவும் போகிறார்கள் என்னே நமது மக்களின் அறிவு! நமது மக்களின் உறுதி!! என்னே நமது மக்களின் சுயமரியாதை!!! என்னே நமது அய்யங்கார்களின் சக்தி.

மித்திரன் ஜோசியம்

கொஞ்ச நாளைக்கு முன் 'சுதேசமித்திரன்" சுயராஜ்யகட்சியில் இருந்து சில பேர் ஜஸ்டிஸ் கட்சிக்குப் போகப் போவதாகவும் ஜஸ்டிஸ் கட்சியாரும் அவருக்கு வேண்டிய சில வாக்குறுதிகள் கொடுக்கப் போவதாகவும் தெரியவருகிறது என்று எழுதி இருந்தான். இது சுயராஜ்யக்கட்சியில் உள்ள சிலர் அக்கட்சியின் யோக்கியதையைக் கண்டு தாங்கள் அக்கட்சியில் இருப்பதற்காக வெட்கப்பட்டு வேறு யோக்கியமான கட்சியின் மூலம் பொது நலச்சேவை செய்யவேண்டுமென்று பிரயத்தனப்படுவார்கள் என்பதை அறிந்து முன் ஜாக்கிரதையாக எழுதிக் கொண்டதே தவிர வேறில்லை.

வகுப்புவாரி பிரதிநிதித்துவம்

இந்தியாவில் தற்காலமிருக்கும் பல்வேறு மதங்கள், பல்வேறு ஜாதிகள், முதலியவைகளை உத்தேசித்து ஒருவருக்கொருவர் நம்பிக்கை உண்டாக்கவும் ஒற்றுமையுண்டாக்கவும் என்பதாகக் கருதி சென்ற சீர்திருத்தத்தின்போது தீர்க்கமாய் விசாரணை செய்து சில வகுப்புகளுக்குப் பிரதிநிதித்துவ ஸ்தானங்கள் ஒதுக்கி வைத்தும் சில வகுப்பார்களுக்கே தனித்தொகுதிகள் மூலம் பிரதிநிதித்துவங்கள் ஏற்படுத்தியும் வைத்திருப்பது யாவரும் அறிந்த விஷயமே, இதிலிருந்து சமீபத்தில் வரப்போகும் சீர்திருத்த விசாரணை கமிஷன்போது முன்பு பொதுத் தொகுதியில் ஒதுக்கி வைத்த வகுப்பாருக்கும் இனித் தனித் தொகுதி மூலம் பிரதிநிதித்துவம் அளிக்கப்பட வேண்டும் என்ற கிளர்ச்சியைப் பார்த்து சிறுதொகையினரான நமது நாட்டுப் பார்ப்பனர்கள் இம்முறை அமுலுக்கு வந்து விட்டால் தாங்கள் இப்பொழுது அனுபவித்துக் கொண்டிருக்கிற ஏகபோக மிராசு போய்விடுமென்றும், தங்கள் சமூகத்துக்குத் தகுந்தபடி விகிதாச்சாரம் கிடைப்பதாயிருந்தால் இப்பொழுது கிடைத்துக் கொண்டிருப்பதில் 10ல் ஒரு பாகங்கூட கிடைக்காமல் போய்விடுமே என்று பயந்து இக்கிளர்ச்சியை ஒழிக்க பல வழிகளிலும் சூழ்ச்சி செய்து வருவது யாவரும் அறிந்த விஷயமே. இச்சூழ்ச்சிகளில் தலைமையான சூழ்ச்சியாக சில மகமதிய சகோதரர்களைப் பிடித்து தங்கள் சமூகத்துக்கு இனித் தனித்தொகுதி வேண்டாமென்று சொன்னதாக ஏற்பாடு செய்து ஒரு பெரிய விளம்பரம் செய்துவிட்டார்கள். இப்பொழுது அது "பிடிக்கப்பிடிக்க நமச்சிவாயம்" போலவாகி முடிந்துவிட்டது. அதாவது இந்து மகா சபையின் நடவடிக்கைகளிலிருந்தும், மகம்மதிய சமூகத்தாரின் பிரமுகர்களிடமிருந்தும் தனித்தொகுதியே நிலைத்திருக்க வேண்டும் என்கிற மாதிரியாகவே விஷயங்கள் வெளியாகிக் கொண்டு வருகின்றன. இதிலிருந்து தென்னாட்டுப் பார்ப்பனர்களின் சூழ்ச்சி பலிக்கவில்லை என்றே தெரிகிறது.

வீண் வேலை.

அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி மெம்பர்களில் சிலரும் சுயராஜ்யக் கட்சி மெம்பர்களில் பலரும் கூடி சென்னை சுயராஜ்யக்கட்சியார் செய்த துரோகத்தைக் குறித்து அகில இந்திய காங்கிரஸ் கமிட்டிக்கு ஒரு பிராது செய்து கொண்டிருக்கிறார்களாம். இது வெறும் வீண்வேலை என்றே சொல்லுவோம் "அசல் அநியாயம் அபீலில் அதுவே காயம்" என்பது போல் அங்குள்ள அதிகமுள்ளவர்களும் சென்னைத் "தலைவர்கள்" தானே.

அறிவிப்பு

நமது 'குடி அரசு" காரியாலயத்தில் காரியஸ்தாகவிருந்த, பி. சாமண்ணாவை 19—4—27 தேதி முதல் காரியாலயத்தினின்றும் நிறுத்தப்பட்டிருக்கிறது என்கிற விபரம் நமது சந்தாதாரர்களுக்குத் தெரிவித்துக்கொள்ளுகிறோம்.



அனைத்துயிர் ஒன்றென்றெண்ணி
அரும்பசி எவர்க்கும் ஆற்றி
மனத்துள்ளே பேதாபேதம்
வஞ்சகம் பொய் களவு சூது
சினத்தையும் தவிர்ப்பாயாகில்
செய்தவம் வேறொன்றுண்டோ?
உனக்கிது உறுதியான
உபதேசம் ஆகுமதானே

குடி அரசு.

பிரபவ-வரு சித்திரை மீ 12-உ

தொழிலாளர்.

சென்னைப் பார்ப்பனத் "தலைவர்கள்" தாங்கள் தான் தொழிலாளர்கள் விஷயத்தில் அதிக அக்கரையுள்ளவர்கள் என்றும், தொழிலாளர்களுக்கு வேண்டிய சகல சவுகரியங்களும் தங்களால் தான் செய்யக்கூடுமென்றும், தொழிலாளர்களுக்கு வேண்டிய பிரதிநிதித்துவங்களெல்லாம் தங்களால் தான் வாங்கிக் கொடுக்கக் கூடும் என்றும், சொல்லி இது காலபரியந்தம் தொழிலாளர்களை ஏமாற்றி அவர்களுடைய ஓட்டுகளைப் பெற்றுப் பதவி பெற்று வந்தது யாவருக்கும் தெரிந்த விஷயமே. சென்றவருஷத்திய முனிசிபல் தேர்தல்களிலும், சட்டசபைத் தேர்தல்களிலும், அதற்கு முன் நடந்த தேர்தல்களிலும் இப்பார்ப்பனர்களின் சூழ்ச்சியை அறியாமல் ஏமாந்து, தொழிலாளர்கள் தங்களுடைய ஓட்டுகளை பெருமை பார்ப்பன அபேட்சகர்களுக்கே கொடுத்து பார்ப்பனால் லாபாரைத் தேர்ந்தெடுக்கச் செய்ததும் யாவருக்கும் தெரிந்த விஷயமே. இப்படியிருக்க, இப்போது மேற்படி தொழிலாளச் சகோதரர்களில் தங்களுக்குத் தாங்களே பிரதிநிதியாய் இருக்கலாமென முயற்சிக்கக் கருதி, வரப்போகும் சென்னை முனிசிபல் தேர்தலுக்கு தங்கள் சகோதரர்களிலேயே இரண்டொருவரை அபேட்சகர்களாய் நிறுத்தத் தீர்மானித்திருக்கிறார்கள். இதை அறிந்த மேற்படி பார்ப்பனர்கள் தொழிலாளர்களை ஏமாற்ற புதிதாய் ஒரு வழி கண்டுபிடித்திருக்கிறார்கள். அது என்னவென்றால் தொழிலாளர்களுக்கு பிரதிநிதித்துவம் வேண்டுமென்றால் அவர்கள் காங்கிரஸ் சுயராஜ்யகட்சியில் சேர வேண்டுமாம். இல்லாவிட்டால் அவர்கள் நிற்கக் கூடாதாம். இது எவ்வளவு வஞ்சகமான தென்பதை வாசகர்கள் யோசிக்க வேண்டும். என்னவெனில், காங்கிரசிலோ சுயராஜ்யக் கட்சியிலோ, தொழிலாளர்கள் சேருவதனால் தொழிலாளிகளின் முதலாளிமார்கள் அவர்களை எப்படியாவது கெடுத்துவிடக் கூடும். அதனால் தொழிலாளிகள் காங்கிரஸில் சேர முடியாமல் போய்விடலாம். அந்த சாக்கை வைத்துக்கொண்டு தொழிலாளிகளை நிற்க விடாமல் செய்துவிடலாம் என்பதுதான். தொழிலாளிகளுடைய ஓட்டுப் பெறும்போது மாத்திரம் பார்ப்பனர் வந்து பிடித்து அவர்களை ஏமாற்றி அவர்களுடைய ஓட்டுகளைப் பெற்று விடலாம் என்கிற தந்திரத்தின் பேரில் தான் பார்ப்பனர்கள் "தொழிலாளர் அநுதாபம்" பேசுகிறார்கள். நமது தொழிலாள நண்பர்களோ இந்த சூழ்ச்சிகளை அறியாமல் "எடுப்பார் கைக் குழந்தைகளாயிருக்கின்றார்கள்". இவைகளெல்லாவற்றையும் அறிந்தேதான் நாம் தொழிலாளிகள் அரசியல் சம்பந்தமான எந்தக்கட்சியிலும் சேரக்கூடாது என்றும், அவர்கள் தங்கள் கால்களிலேயே நிற்கக்கூடிய சக்தியைப் பெறவேண்டும் என்றும், அதுவரை எவ்வளவு காலம் தாமதமானாலும் குற்றமில்லை என்றும், பேசியும் எழுதியும் வந்தோம். நாம் இப்படிப் பேசி எழுதி வந்ததைப் பற்றி பல "தொழிலாளர்கள் தலைவர்களுக்கு" நம்மீது மனஸ்தாபம் ஏற்பட்டதும் நமக்குத் தெரியும். சமீபத்தில் கூடிய தொழிலாளர் மகாநாட்டு உபசரணைத் தலைவர் முறையிலும் இதைச் சொன்னோம். மித்திரன் அதைப்பற்றி மிகுதியும் கோபம் கொண்டது. ஆனபோதிலும் இன்னமும் நாம் அந்த கொள்கையுடன் தான் இருக்கிறோம். இப்போது சென்னை காங்கிரஸ் கமிட்டியில் முனிசிபல் தேர்தலுக்கு அபேட்சகர்கள் நிறுத்தும் விஷயத்தில் ஸ்ரீமான்கள் சிங்காரவேலு செட்டியாருக்கும், சத்தியமூர்த்தி, ரங்கசாமி அய்யங்கார், சீனிவாசய்யங்கார் முதலியவர்களுக்கும் நடந்த சம்பாஷணை, அடிதடி சண்டை முதலியவைகள் நடந்ததையும், தொழிலாளர் கூட்டத்தில் ஸ்ரீமான்கள் சிவராவ், கலியாணசுந்தர முதலியார், முதலியவர்கள் பேசிய பேச்சுகளிலிருந்தும் பார்ப்பன தந்திரங்கள் நன்றாய் விளங்குகின்றன. இனியாவது நமது தொழிலாள சகோதரர்கள் இவ்வரசியல் புரட்டுகளின் மாய்கையில் இருந்து விலகுவார்களா? என்பதுதான் நமது கோரிக்கை. அப்படி அவர்கள் விலகித் தனிப்பட்ட ஒரு தொழிலாளி என்கிற முறையில் தேர்தலுக்கு நிற்பார்களானால், நாமும் நம்மாலானதைச் செய்யத் தயாராயிருக்கிறோம் என்றும், எதற்கும் எதிர்த்தாலும் அதை ஒரு கை பார்த்துவிடலாம் என்றும், நமது தொழிலாளர் சகோதரர்களுக்குத் தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

ஜில்லா போர்டு பிரசிடெண்டு தேர்தல்கள்

வகுப்பு துவேஷம் ஒழிந்ததற்கு இதுஒரு சாக்ஷி

தமிழ் நாட்டிலுள்ள 11 ஜில்லாக்களின் ஜில்லா போர்டு பிரசிடெண்டு ஸ்தானங்களில் இது சமயம் திருச்சி நீங்கலாக (அங்கு மாத்திரம் பார்ப்பன பிரசிடெண்டு) மற்ற 10 ஜில்லாக்களில் பார்ப்பனரல்லாத பிரசிடெண்டுகளே இருந்து வருகிறார்கள். அதாவது ஸ்ரீமான்கள் செங்கல்பட்டுக்கு M K ரெட்டியும், தென் ஆற்காட்டுக்கு சீதாராம ரெட்டியும், வட ஆற்காட்டுக்கு கிருஷ்ணசாமி நாயுடுவும், சித்தூருக்கு முனிசாமி நாயுடுவும், சேலத்திற்கு எல்லப்ப செட்டியாரும், கோயம்புத்தூருக்கு ரத்தினசபாபதி முதலியாரும், தஞ்சைக்கு பன்னீர் செல்வமும், மதுரைக்கு போக்ஸ் துரையும், ராமநாதபுரத்திற்கு ராமநாதபுரம் ராஜாவும், திருநெல்வேலிக்கு குமாரசாமி ரெட்டியாருமாக இருக்கிறார்கள். இது ஜஸ்டிஸ் கட்சி ஏற்பட்ட காலமுதல் இம்மாதிரி பார்ப்பனரல்லாத கனவான்கள் வகித்து வந்தது என்பதும் அதனாலேயே பார்ப்பனர்கள் நமது ஜஸ்டிஸ்கட்சியையும் அதன் தலைவரான பனகல் ராஜாவையும் வெட்டிப்புதைக்கவேண்டும் என்று சொல்லி வந்ததும், இப்பொழுது ஏற்பட்ட அரைப் பார்ப்பனரான சுப்பராயன் மந்திரி சபையின் மூலம் இவைகளை மாற்றி இத்தனை ஜில்லா போர்டுகளையும் பார்ப்பனமயமாகவும், பார்ப்பன அக்கிரகாரமாகவும், பார்ப்பன அன்னசத்திரமாகவும், பார்ப்பன வேதபாடசாலையாகவும் ஆக்கிக்கொள்ள பார்ப்பனர்கள் எல்லோரும் ஒன்று சேர்ந்து "பகீரதப் பிரயத்தனம்" செய்கிறார்கள் என்பதும் யாவரும் அறிந்ததே. இது காரணமாகவே நமது அரைப் பார்ப்பன மந்திரி ஒரு ஜில்லா போர்டு பிரசிடெண்டுகளாவது அவர்கள் மறுபடியும் தேர்தலுக்கு நிற்பதற்கு லாயக்கில்லாமல் பழைய மெம்பர் ஸ்தானமே நாமினேஷன் செய்யாமல் ஒரே அடியாய் அடித்து விட்டார். ஆனபோதிலும் ஏதோ ஒரு சட்டப்படி ஏற்பட்டிருந்த சட்ட சம்பந்தமான ஆதாரத்தைக் கொண்டு செங்கற்பட்டு, தென் ஆற்காடு, சேலம், தஞ்சை, திருநெல்வேலி, முதலிய ஜில்லா போர்டு பிரசிடெண்டுகள் மறுபடியும் நின்று ஏகமனதாகவும், 4-ல் 3-பங்கு பேர்களாலும், 3-ல் 2 பங்கு பேர்களாலும், அதிக மெஜாரிட்டியாய்த் தெரிந்தெடுக்கப்பட்டு விட்டார்கள். ஆனாலும் பார்ப்பனர்கள் சும்மாயிராமல் நீதி இலாகாவில் தங்களுக்கு இருக்கும் செல்வாக்கு ஆணவத்தால் இத்தேர்தல்கள் பேரிலும் அந்தந்த ஜில்லா கோர்ட்டுகளில் தேர்தல்களை ரத்து செய்யப்பட வேண்டும் என்று வியாஜ்ஜியம் தொடுத்திருக்கிறார்கள். இவ்வியாஜ்ஜியங்களில் முக்கியமான வியாஜ்ஜியமாகிய தஞ்சாவூர் ஸ்ரீமான் பன்னீர் செல்வம் தேர்தலைக் குறித்ததானதும், காங்கிரஸ் தலைவர், சுயராஜ்யகட்சி தலைவர், பார்ப்பனத்தலைவர், மஹாஜன அட்வகேட் ஜெனரல், "அவதார புருஷர்", "ஜஸ்டிஸ்கட்சியை வெட்டிப்புதைத்தவர்", "வகுப்புத் துவேஷத்தை ஒரே அடியாய்த் துலைத்தவர்", ஆகிய பெருமைகள் பெற்ற ஸ்ரீமான் எஸ் சீனிவாசய்யங்கார் அவர்களை வக்கீலாக வாதித்ததுமான வியாஜ்ஜியத்தை வெள்ளிக்கிழமை மாலையில் செலவு தொகையுடன் தள்ளி லக்ஷணை உறுதிப்படுத்தி இருப்பதாகத் தந்தி வந்திருக்கிறது. ஆனால் ஸ்ரீமான் பன்னீர் செல்வத்தின் வக்கீலோ "மூளை இல்லாத வகுப்பு" என்கிற பார்ப்பனரல்லாதார் வகுப்பைச்சேர்ந்த ஸ்ரீமான் வெங்கிட்டரமண ராவ் நாயுடு என்பதையும் குறிப்பிடுகிறோம். இது தவிர, சேலம் ஸ்ரீமான் எல்லப்ப செட்டியார் தேர்தல் வி

ஷயத்தில் தேர்தல் நடக்காமலிருக்கச் செய்ய சேலத்து பார்ப்பனர்கள், முக்கியமாய் ஸ்ரீமான் சி. ராஜகோபாலாச்சாரியார் முதல் கொண்டு, மந்திரியின் கையைப் பிடித்து எழுதிவைத்தும் மந்திரியின் நிபந்தனைப்படி தேர்தல் நடந்து அதில் ஏறக்குறைய ஏக மனதாய் செட்டியார் வெற்றி பெற்றும், மறுபடியும் அதைக் கன்னடி செய்யும்படி ஜட்ஜ் கோர்ட்டில் விண்ணப்பம் கொடுத்ததல்லாமல் மந்திரியைப் பிடித்தும் கெஜட்டில் பிரசுரம் செய்யாமல் நிறுத்திவைத்திருக்கிறார்கள் என்று கேள்விப்படுகிறோம். இக்கேசுகளை மந்திரி அடியோடு நிராகரித்து விடவேண்டிய ஏற்பாடுகள் செய்தாய் விட்டதென்றும் ஒரு பார்ப்பன கனவான் அதற்கு மந்திரிக்குத் தக்க காரணங்கள் காட்டி ஜட்ஜ்மெண்ட் மாதிரி விபரங்கள் கூட எழுதிக்கொடுத்திருக்கிறார் என்றும், மந்திரி இலாக்காவிலுள்ள பொறுப்புவாய்ந்த அதிகாரிகள் இதை ஆமோதிக்கிறார்கள் என்றும், கேள்விப்படுகிறோம். வகுப்பு த்வேஷம் ஒழிக்க தன்மைக்கு இது ஒரு சாக்ஷி.

யாரிடம் வகுப்புத் துவேஷம் இருக்கிறது?

ஸ்ரீமான்கள்.
பார்ப்பன ரங்காச்சாரியும், பார்ப்பனரல்லாத ஷண்முகம் செட்டியாரும்.

சமீப காலத்திற்குள், அதாவது சுமார் 6 மாதத்திற்குள், நமது மாகாணத்தில் இருந்து ஆஸ்திரேலியாவுக்கு இரண்டு கனவான்கள் இந்தியாவின் பிரதிநிதியாகப் போயிருக்கிறார்கள். அவர்களில் ஒருவர் பார்ப்பனரல்லாத வகுப்பைச் சேர்ந்த, கோவை ஸ்ரீமான் ஆர். கே. ஷண்முகம் செட்டியார் அவர்கள், எம். எல். ஏ. ஆவார். மற்றவர் பார்ப்பனர் வகுப்பைச் சேர்ந்த, மைலாப்பூர் அய்யங்கார், ஸ்ரீமான், டி. ரங்காச்சாரியாவார். ஸ்ரீமான் செட்டியார் ஜனப்பிரதிநிதியாய் கவர்ன்மெண்டாருடைய பணச்செலவில்லாமல் பொது அரசியல் விஷயமாய்ச் சென்று வந்தவர். ஸ்ரீமான் ரங்காச்சாரியார் கவர்ன்மெண்டு பிரதிநிதியாய் சர்க்கார்ச் செலவில் ஏதோ ஒரு லீகின் திருப்புகழுக்காக "இந்தியப் பிரதிநிதியும் வந்திருந்தார்" என்று கணக்குக் காட்டுவதற்காக போகிறவர். இந்த லக்ஷணத்தில் தனக்கு ஒரு உத்தியோக காரியதரிசியாம், அதாவது தனது மகனை பிரைவேட் காரியதரிசியாக்கிக்கொண்டார். சௌகரியத்திற்கு ஒரு ஆளாம். அதற்கு மற்றொருவனை நியமித்துக்கொண்டார். ஆகவே அப்பன் மகன் மூவருமே போகிறார்கள். திரும்பிவருவதற்குள் இந்தப்பிள்ளைகளுக்கு ஏதாவது மாதம் 300, 400 ரூபாய்களில் உத்தியோகங்களும் கிடைத்து விடலாம். ஸ்ரீமான் ரங்காச்சாரியாருக்கும் கூடிய சீக்கிரத்தில் மாதம் 4000, 5000 கிடைக்கும் ஏதாவது கமிஷனில் மெம்பர் ஸ்தானமோ அல்லது நிர்வாக சபைகளில் மெம்பர் ஸ்தானங்களோ கிடைத்து விடலாம். சர்க்கார் தயவை எதிர்பார்த்து சர்க்கார் பிரதிநிதியாய் சர்க்கார் செலவில் போன ஸ்ரீமான் ரங்காச்சாரிக்குப் பார்ப்பன பத்திரிகைகளும் பார்ப்பனர்களும் செய்த ஆடம்பரம் என்ன? விருந்து என்ன? வழிபாட்டு உபசாரம் என்ன? என்பதையும், ஜனப்பிரதிநிதியாய் தன்னுடைய லக்ஷியமும் கவனியாமல் சர்க்கார் செலவில்லாமல் தனியே போனவருக்கு இப்பார்ப்பனர்கள் செய்த விஷயம் என்ன? என்பதையும் யோசித்துப் பார்த்தால் நமது பார்ப்பனர்களுக்கு வகுப்புத் துவேஷம் இல்லையா என்பது விளங்காமல் போகாது.

தவிர, செட்டியாருக்கு கொஞ்சம் பொது ஜனங்களிடம் செல்வாக்கு வந்து விட்டதாய்த் தெரிந்தவுடன் அவரை ஒழிக்க ஆரம்பித்தும் செட்டியாரைக் கூட்டிக்கொண்டு திருச்சி, திருநெல்வேலி முதலிய ஜில்லாக்களில் ஊர் ஊராய்த் திரிந்து தாங்கள் போக்கியதை சம்பாதித்துக்கொண்டு, தங்களுக்கு ஜயம் கிடைத்த பிறகு, தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியிலிருந்து விலக்கி விட்டது. இப்பொழுதும் இந்தியா சட்டசபை [illegible]ப் பேசக்கூடியவர் ஸ்ரீமான் செட்டியார் தான் என்று இந்தியா பத்திரிகைகள் பூராவும் கூச்சல் போட்டாலும், சென்னை பார்ப்பனப் பத்திரிகைகள் அப்பேச்சுகளைப்பற்றி ஒரு வரிகூட எழுதாமல், ஆர். கே. ஷண்முகம் செட்டியார் என்பதற்கு பதிலாக எம். செட்டியார் என்றும், அதாவது முன் ஸ்ரீமான், சமபந்த முதலியார் இந்தியா சட்டசபையில் இருந்த காலத்தில் அவர் பெயர் யாருக்கும் தெரியக்கூடாது என்கிற எண்ணத்தின் பேரில், எஸ். முதலியார் என்று எழுதி வந்தது போலவே எம். செட்டியார் என்று ஆரம்பித்து விட்டார்கள். இதிலிருந்து யாரிடம் வகுப்புத் துவேஷம் இருக்கிறது என்பதை இனியாவது உணரும்படி வேண்டுகிறோம்.

ஒரு வெளிப்படையான ரகசியம்.

அடுத்த 5-5-27 தேதியில் பம்பாயில் கூடப்போகும் அகில இந்திய காங்கிரஸ் கமிட்டிக்கு ஸ்ரீமான் சீனிவாசய்யங்கார் ஒரு தீர்மானம் கொண்டுபோகப் போகிறாராம். அதாவது:—

மாகாண சட்டசபைகளில் காங்கிரஸ்காரர்கள் எப்படி நடந்து கொள்ளவேண்டுமென்கிற விஷயத்தில் அந்தந்த மாகாணத் தீர்மானத்தின்படி நடந்து கொள்ள மாகாணச் சுதந்திரம் கொடுத்து விடவேண்டும் என்பதே.

அந்தத் தீர்மானம் நிறைவேறிய உடன் சென்னை மாகாண காங்கிரஸ் கமிட்டியில் சில தீர்மானங்கள் கொண்டுவரப்போகிறாராம். அதாவது:—

மந்திரிப் பதவியை ஒப்புக்கொள்ளலாம் என்றும், இப்போதுள்ள மந்திரிசபையை கலைத்து விட வேண்டும் என்றும், மறு மந்திரி சபையமைப்பதில் ஸ்ரீமான் சாமி வெங்கிடாசலம் செட்டியார் முதல் மந்திரியாகவும், ஸ்ரீமான் சத்தியமூர்த்தி கல்வி, தேவஸ்தானம், மந்திரியாகவும், ஸ்ரீமான் சுப்பராயன் கலால் மந்திரியாகவும் அமைப்பது என்றும் முடிவாயிருப்பதாகத் தெரிகிறது. மற்ற மந்திரிகளுக்கு வேறு சில உத்தியோகங்கள் கொடுக்கும் விஷயத்தில் யோசனை செய்து கொண்டுவரப்படுகிறது. ஆனால் ஸ்ரீமான் சுப்பராயன் முதல் மந்திரி பதவியை விட இஷ்டப்படவில்லை என்றும், எந்த இலாகாவை யார் வேண்டுமானாலும் வைத்துக்கொள்ளலாம் என்று சொல்லுவதாகவும் சொல்லிக்கொள்ளப்படுகிறது.

இதிலுள்ள கஷ்டங்களை சரி செய்ய ஒரு யோசனை சொல்லும்படி ஸ்ரீமான் சி. ராஜகோபாலாச்சாரியாரைக் கேட்டிருப்பதாகவும், அவர் ஸ்ரீமான் சுப்பராயனுக்குத்தான் முதல் மந்திரியும், ஸ்தல ஸ்தாபன இலாகாவும் இருக்கவேண்டுமென்றும் சொல்லுவதாகவும் சொல்லிக்கொள்ளப்படுகிறது. யார் எப்படிப் போனாலும் ஸ்ரீமான் சத்தியமூர்த்திக்கு கல்வி மெம்பர் ஸ்தானம் கிடைக்குமா என்று பார்ப்பனர்கள் ஆசைப்படுகிறார்கள் என்றும் தெரியவருகிறது.

ஸ்ரீமான், சி. வி. வெங்கிடரமணய்யங்காருக்கு சட்டசபை தலைவர் வேலை தீர்மானமாகிவிட்டதாகவும் தெரியவருகிறது. இந்த அபிப்பிராயங்கள் நிறைவேறினாலுங் கூட இப்போதிருப்பதைவிட நிலைமைகள் ஒன்றும் மாறிவிடாது என்பதும், பார்ப்பனரல்லாதாரைப் பொறுத்த வரையிலும் இன்னம் கொஞ்சம் கண்விழிப்பும் அனுகூலமும் ஏற்படுமென்று நம்புகிறோம்.

விடுமுறை வேலை

விடுமுறை காலத்தில் பார்ப்பனரல்லாத மாணாக்கர்களும், வக்கீல்களும், தங்கள் நேரத்தை வீணாகச் செலவுசெய்யாமலும், அனாவசியமாய்த் தங்கள் பணத்தைச் செலவு செய்துகொண்டு கண்டவிடங்களில் சுற்றித்திரியாமலும் தங்கள் தங்கள் ஊர்களில், கிராமங்களில் உள்ள பார்ப்பனரல்லாதவர்களுக்குப் பார்ப்பனப் புரட்டுகளை விளக்கிப் பார்ப்பனீயத்தை ஒழிப்பதும், சுயமரியாதையின் தத்துவத்தை எடுத்துச் சொல்லுவதும், "ஜஸ்டிஸ்" "திராவிடன்" "குடி அரசு" முதலிய பத்திரிகைகளுக்கு சந்தாதாரர்களைச் சேர்ப்பதுமான வேலையிலேயே ஈடுபட வேண்டும். இதற்குத்தான் ஓய்வு கிடைத்திருக்கிறது. மாணவர்கள் படித்துக் கெட்டு இனி மேல தேசத்திற்குச் செய்யப்போகும் துரோகத்திற்கும், வக்கீல்கள் செய்த, செய்துவருகிற, செய்யப்போகிற துரோகத்திற்கும் இதுவே பிராயச்சித்தமாகும்.

கோயம்புத்தூர் நாயுடு மகாநாடு.

கோயம்புத்தூர் நாயுடு மகாநாடு வெகு சிறப்பாய் நடந்தது. தீர்மானங்கள் வெகு தாராள நோக்கத்துடன் நிறைவேறின. அக்கிராசனர் பிரசங்கம், முகவுரை இரண்டும் கவனித்துப் படிக்கத்தக்கன. கிறிஸ்துவ மதம் மாறின ஸ்ரீமான் தீனதயாளு நாயுடு குடும்பத்தை நாயுடு சமூகத்தில் சேர்த்துக் கொள்ளப்பட்டது எனவே, மகாநாடு சிறப்பாயும், வெற்றியுடனும் நடைபெற்றதென்றே சொல்லவேண்டும்.

திருத்தம்

'எது பொய்ப்பிரசாரம்' என்ற கட்டுரையுள்ள பக்கங்கள் 5, 6 என்றிருப்பதை தப்பிலாக 3, 4 என்று திருத்திக் கொள்ளுமாறு சந்தாதாரர்களைக் கேட்டுக் கொள்ளுகிறோம்.

இன்னமும் பார்ப்பன அகம்பாவமா?

சர். சி. பி. ராமசாமி அய்யரவர்கள் கட்டட அணை விஸ்தரிப்புக்கு அஸ்திவாரக்கல் நாட்டச் சென்றிருந்த காலத்தில், அவருக்காக அங்கொரு விருந்து ஏற்பாடாயிருந்தது. அவ்விருந்துக்குப்பல பார்ப்பனரல்லாதாரும் அழைக்கப்பட்டிருந்தனர். விருந்துக்காக இலை போட்டதில் பார்ப்பனரல்லாதாரும் பார்ப்பனர்களோடு வரிசையாய் உட்க்கார்ந்து கொண்டார்கள். இதைக்கண்ட சில பார்ப்பனர்கள் இவ்விருந்தில் கூட உட்கார்ந்திருப்பதைச் சகியாதவர்களாகி அங்கிருந்த பார்ப்பனரல்லாதாரைப் பார்த்து இது பார்ப்பனர்களுக்காக ஏற்பட்ட கூடாரம் எனவும், இங்கு பார்ப்பனரல்லாதார் உட்காரக் கூடாதென்றும் சொன்னார்களாம். அங்கிருந்த பார்ப்பனரல்லாதார்கள் முக வாட்டத்துடன் எழுந்து வெளியில் வந்து பார்ப்பனரல்லாதாருக்கென ஏற்பட்டிருந்த வேறு தனியிடத்தில் உட்கார்ந்து சாப்பிட்டார்களாம். இந்தப் பார்ப்பனரல்லாதார்கள் யாரென்று பார்த்தால் உடையார் பாளையம் இளையஜமீன்தார், திருச்சி ஜில்லா போர்டு வைஸ் பிரசிடெண்டு, திருச்சி ஜில்லா நிலச்சுவான்தார்கள் சங்க காரியதரிசி, திருச்சி முனிசிபல் கவுன்சிலர் முதலிய தகுந்த கனவான்களென்று தெரியவருகிறது. இதைப்பார்க்கும் போது இந்த விஷயத்தில் பார்ப்பனர்களுடைய அகம்பாவத்தைப் பார்க்கிலும் பார்ப்பனரல்லாதாருடைய சுயமரியாதையற்ற தன்மையே தலைசிறந்து விளங்குகிறது. என்ன செய்யலாம். சட்டமெம்பரின் தயவு வேண்டியவர்கள் சுயமரியாதை எதிர் பார்க்க முடியுமா?

ஈரோடு முனிசிபல் ஆயுர்வேத ஆஸ்பத்திரி

திரு. B திருமலசாஸ்திரிகள் வைத்தியராயிருக்கும் ஈரோடு முனிசிபல் ஆயுர்வேத வைத்தியசாலையில் சிகிச்சை செய்து கொள்வதற்காக 1926-27 வருஷங்களில் வந்தவர்களின் ஜாபிதா பின்வருமாறு.

சிகிச்சைக்காக சென்றவர்களின் மொத்தம் 31,098. அதில் ஹிந்துக்கள் 26,494 மஹமதியர்கள் 3,558, கிருஸ்தவர்கள் 1,016 ஆவார்கள் இவற்றுள் இவ்வருடத்தில் புதிதாக சிகிச்சை செய்து கொண்டவர்களுள் முனிசிபல் எல்லைகளிலிருந்து 13042ம், வெளியிலிருந்து 382 பேர்களுமாக மொத்தம் 13431 பேர்களாகும். சென்ற 1925-26ல் மொத்தம் சிகிச்சை செய்து கொண்டவர்களும் புதிதாக சிகிச்சை செய்து கொண்டவர்களும் முறையே 30373ம், 12522, இவ்வருடம் 31059ம் 13431ம் ஆகும். எனவே சென்ற வருடத்தைக் காட்டிலும் இவ்வருடம் 725 பேர்கள் அதிகப்படியாக சிகிச்சை பெற்றிருப்பதுடன் சென்ற வருடத்தைக் காட்டிலும் அதிகப்படியாக இவ்வருடம் 859 பேர்கள் புதிதாக சிகிச்சைக்குச் சென்றிருக்கிறார்கள்.

இந்த ஆஸ்பத்திரி ஸ்தாபித்தது முதற் கொண்டு திரு. B. திருமலை சாஸ்திரிகள் வைத்தியராக இருந்து வருகிறார்.

மதிப்புரை

சுயமரியாதைக் காலெண்டர்.

பிரபவ ஆண்டு சுயமரியாதைக்காலெண்டர் வரப்பெற்றோம். இதில் திதி, வார நக்ஷத்திரங்கள், ஆங்கிலம், தமிழ் தேதிகளும், விசேட தினங்களையும் அமிர்தாதி யோகங்களையும் இராகு குளிகை, வார சூலை, பரிகாரம் முதலிய மனிதவர்க்கங்களுக்கு உபயோகப்படும் படியான குறிப்புகளுடனும் சுயமரியாதையைப் பெற்றுய்த்தொழுக வேண்டிய பன்னிரண்டு மஹாவாக்கியங்களையும் பொறிக்கப்பட்டு, இவைகளின் மத்தியில் ஸ்ரீமான் ஈ. வெ. ராமசாமி நாயக்கரவர்களின் திரு உருவப்படமும் பொலிந்து காண்கிறதுடன் ஷை பன்னிரண்டு மஹா வாக்கியங்களின் சூத்திரங்களுக்கும் விரிவுரைகளாககாணப்படும் 54 வாக்கியங்களும பன்னிரெண்டு பக்கங்களிலும் பொலிந்து மூன்று விதமான வர்ணங்களால் மிகவும் அழகுபெற அச்சியற்றி இருக்கிறது. இதனைக் கண்ட மட்டில் குறிப்பதல்லாமல் ஒவ்வொரு தினத்திற்கும் ஒவ்வொரு தேசபக்தர், தமிழர் என்போரும அவசியமாய் ஒவ்வொரு தினங்களிலும் பற்றி யொழுக வேண்டியனவை இன்னதென்பதையும் விளக்கிக்காட்டி ஆழ்வாரின் ஆதிக்கத்தாலும் ஆன்றோர் என்று சொல்லித்திரியும் கெடுதிகளிலிருந்து தப்பி அவ்வவர்களின் சுயமரியாதையைக் காத்த தமிழ் பென்னும்பிணியினின்றும் உய்ந்தொழுக மிகவும் இன்றியமையாத சாதனம் இது என்று சொல்ல சந்தோஷிக்கின்றோம்.

இது கிடைக்குமிடம்:—

மணிவாசகத் தமிழகம், திருச்சி இதன் விலை பிரதி 1-க்கு அணா இரண்டேதான்.

வியாசக்கோவை

என்னும் புத்தகம் ஒன்று கிடைக்கப் பெற்றோம். இது 156 பக்கங்கள் கொண்ட அழகிய ஒரு புத்தகம் இதில் தேசாபிமானம், பத்திரிகாபிமானம், மதுவும் அதன் கேடும், இந்தியாவும் தீண்டாதவரும், சமூக சீர்திருத்தமும் வைதீக கோஷ்டியார்களும், இந்து முஸ்லீம் ஒற்றுமை, ஹிந்து மகாசபையும் தன்ஸீம் இயக்கமும், இந்தியாவின் பெருமையைப் போக்கும்வழி, கல்வி பெண் கல்வி, இந்தியாவில் படித்தவர்களின் புள்ளி விவரங்கள் இன்னும் இரண்டாம பாகத்தில் முஸ்லீம்களின் நவீன அநுஷ்டானம், வீண் செலவு, இஸ்லாம் மதம் வாளால் பரவியதா வென்கிற தலைப்புகளைக் கொண்ட விஷயங்கள் இனிமையாகவும் சுலபமாகவும் யாவராலும் அறியத்தக்கதாகவும் அழகாகவும் இயற்றியமைக்கப்பட்டிருக்கிறது. தவிர இதிலடங்கிய விஷயங்களின் தலைப்பெயர்களாலேயே அதன் விபரமான விஷயங்களின் அமைப்புகளைச் சொல்லாமலேயே யாவருக்கும் புலப்படும். இதன் விலை ரூபாய் ஒன்று

கிடைக்குமிடம்:—

ஷம்சுதீன் சாயபு பெரிய பள்ளி வாசல் ஒரு P. B 339 கொழும்பு.

இந்தியக் கைத்தொழில்

(கதரின் மகிமை)

என்னும் அழகிய சிறுபுஸ்தகம் ஒன்று கிடைக்கப்பெற்றோம். இது தற்காலத்திற்கும், நம் நாட்டாருக்கும் மிகுதியும் வாசித்துத் தொழுகற்பாலதென்பது இதைவாங்கிப்படிக்கும் ஒவ்வொருவருக்கும் தோன்றாமற்போகாது. இதில், இந்தியக் கைத்தொழில், முற்கால நிலைமை, தற்கால நிலைமை, அதன் அழிவுக்குக் காரணம், நூல்நூற்றல் நெய்தல், இத்தொழிலின் சிறப்பு, இந்து மதம், புத்த மதம், கிருஸ்துவ மதம், மகமதிய மதம் இத்தகைய மதங்களுக்கும் ஷை தொழிலால் உண்டாகும் ஏற்றங்கள் ஷை தொழில் இந்தியாவில் முன்னிருந்த நிலைமை கைத்தொழில் அழுந்தின காரணம் அதனால் இந்தியாவுக்கேற்பட்ட கஷ்ட நஷ்டங்கள். அதற்காக நாம் செய்யவேண்டுவதென்னவென்பது முதலிய எண்ணிறந்த இன்றியமையாத விஷயங்கள் பெண்களும் பேதைகளும எளிதில் உணர்ந்தொழுகுமாறு இதை ஆக்கிய திரு. வெ. திருகூடசுந்தரம்பிள்ளை அவர்கள், நம் நாட்டிலுள்ள அபிமானத்தால் நமமவர்களுக்கு உபகரித்துத் தந்தமைக்கு நாம் ஒவ்வொருவரும கடமைப்பட்டிருப்பதாக நினைத்து வாங்கி வாசித்தொழுக வேண்டுகிறோம். இதன் விலை அணா ஒன்றேதான்.

இதே ஆசிரியர் மற்றும் ஒரு நூலை, சுயராஜ்யம் (அதன் பொருளும அவசியமும) என்ற பெயருடன் வெளியிட்டுள்ளாராகையால் அதற்கு மேற்சொன்ன குணங்களும், அவசியங்களும பொருந்துமென்பதை வாங்கிப் படிப்பவர்கள் யாவரும ஒப்புக்கொள்வார்களென்பதில் சமசயமில்லாதென்றே நினைக்கிறோம இதன் விலை 0—0—6 பைசாதான இதன் விலைகள் அச்சுக் கூலிக்கு கூடிதத்திற்குமே பொருமோ வெனவும் ஐயுறுகின்றோம. கிடைக்குமிடம

ஜில்லா காங்கிரஸ் ஆபீஸ்

திருநல்வேலி.

திருவாளர் தே. வெ. சென்னிசெட்டி
அண்ட் சன்ஸ், ஷராப் ஜவுளி வியாபாரம்
குகை சேலம்.

இவர்களது பிரபவ-௵த்திய காலெண்டர் தமிழ் வருஷம, மாதம், தேதி, விரதநாட்கள், பண்டிகை நாட்கள், அடங்கிய 12 இதழ்கள் உள்ளதும் ஒவ்வொரு விதமும் தனித்தனி கலர்கள் உள்ள பெரிய எழுத்துகளாற் பதிக்கப் பெற்றது................ இது பார்ப்பதற்கு அழகு வாய்க்கப் பெற்றிருக்கிறது.

தமிழ் புக்கீப்பிங்.

விலை ரூபாய் 1.

கணக்கு வைக்கும் முறையை நன்கு போதிப்பது ஒற்றைப் பதிவு, இரட்டைப் பதிவு இரண்டு பாகங்களுமடங்கி இருக்கின்றன. அநேக வியாபார இரகசியங்களையு முடையது. வியாபாரிகள், மாணவர்கள், கம்பெனி உத்தியோகஸ்தர்கள் எல்லோருக்கும் அவசியம்.

தே. ஆறுமுக செட்டி.
முதலியார் பேட்டை, புதுச்சேரி.

மூன்றாவது அகில இந்திய நாயுடு மார் மகாநாடு.

சர். கே. வி. ரெட்டி நாயுடுகாரின் தலைமைப்பேருரை.

ஜாதி வித்தியாசத்தால் விளைந்த தீமை

கோயம்புத்தூரில் இம்மாதம் 15ம் தேதியில் கூடிய மூன்றாவது அகில இந்திய நாயுடுமார் மகாநாட்டில் தலைமை வகித்த சர். கே. வி. ரெட்டி நாயுடுகாரின் அக்கிராசனப் பேருரையின் சாராம்சம் பின் வருமாறு:—

விஜய நகர ராஜ்யத்தைப் பரிபாலனம் செய்து வந்த சக்ரவர்த்திகளும், மதுரை, தஞ்சாவூர் முதலிய ராஜ்யங்களையும் அரசாட்சி புரிந்து வந்த மன்னர்களும் நாயுடுமார்களே என்பதும் அவர் தம் ஆட்சியின் அரும் பெரும் புகழும், மாபெருமாண்பும், திகழ் பெருஞ் செல்வமும், சீருஞ் சிறப்பும், சிறந்தோர் ஆற்றலும் இந்திய சரித்திரத்தில் காணப்படும் உண்மைகளாகும். விஜய நகர இராஜ்யத்தின் மேன்மையைப் பற்றியும் அதன் தீர வீர பெரும் குணங்கள் பற்றியும் அநேக ஐரோப்பியர்களும் புகழ்ந்து போயிருக்கின்றனர். செவெல், என்னும் ஆங்கில ஆசிரியரால் எழுதப் பெற்ற "மறக்கப்பட்ட இராஜாங்கம்" ("Forgotten Empire") என்ற புஸ்தகத்தைப் படித்தவர்கள் விஜயநகர இராஜ்யத்தின் மகிமையையும் பெருமையையும் உணர்ந்து கொள்ளலாம். விஜயநகர இராஜாங்கத்தைத் தவிர வேறொரு உண்மையான ஹிந்து இராஜாங்கம் சரித்திர காலத்தில் இந்நாட்டிலிருந்ததாக நான் நினைக்கவில்லை. ஸ்ரீராமனும், அரிச்சந்திரனும், ஹரிச்சந்திரனும். ஆகியவர்களெல்லாம் புராணங்களில் சொல்லப்பட்ட சக்ரவர்த்திகளே யொழிய உண்மையான நம்பத்தகுந்த சரித்திர சம்பந்தமான ஒழுக்கமான நூல்களில் காணப்படவில்லை. ஹர்ஷா ஒரு சக்ரவர்த்திதான் என்பதில் சந்தேகமில்லை. ஆனால் ஹர்ஷருடைய இராஜாங்கமானது, கிருஷ்ண தேவருடையதைப்போன்ற அவ்வளவு பெரிய இராஜாங்கமல்ல.

ஜாதி தொலைய வேண்டும்.

என் நண்பர் திருவாளர் பி. வி. என். எதிராஜுலு நாயுடு அவர்கள் தன்னை "க்ஷத்திரியர்" என்று அழைத்துக் கொள்ளப் பிரியப்படுகிறார் போல் தோன்றுகிறது. எனக்கு அந்தப் பெயர் வேண்டாம் நான் 'சூத்திரனுமல்ல' 'க்ஷத்திரிய' னுமல்ல யாரும் என்னை சூத்திரனென்று கூப்பிடக்கூடாது. நான் "க்ஷத்திரியன்" என்று சொல்லிக்கொள்ளுவதினால் நான் பெருமையும் அடையப் போவதில்லை. என்னை "சூத்திரன்" என்று யாராவது சொன்னால் நான் எப்படி பொறுக்க மாட்டேனோ அதே போல் என்னை "க்ஷத்திரியன்" என்று சொன்னாலும் நான் பொறுக்க மாட்டேன். இப் பெயர்களெல்லாம் நம்மைப் பிரித்தாள எண்ணங் கொண்டவர்களால் கொடுக்கப்பட்டனவாகும். நாம் இதனையெல்லாம் மறந்து விடலாகாது. நாமெல்லாம் இந்த நாட்டின் சொந்தக்காரர்களாகிய "திராவிடர்கள்" என்று சொல்லிக்கொள்வதில் எனக்கு மகிழ்ச்சியும் ஆனந்தமும் உண்டாகிறது. அதில்தான் எனக்கும் உங்களுக்கும் பெருமையுண்டென்று நான் சொல்லுகிறேன். "பிராமணன்" என்பதும் "சூத்திரன்" என்பதும் இந்திய நாட்டுக்குப் புதிய மொழிகள். ஆரியர்கள் இந்நாட்டுக்குப் பிழைக்க வருவதற்கு முன்னால் இத்தகைய வித்தியாசங்கள் நம் நாட்டிலிருந்ததில்லை. ஆரியர்கள் இந்நாட்டின் மேல் படையெடுத்து வருவதற்கு முன்னால், இந்நாட்டில் ஜாதி வித்தியாசமே கிடையாது. நமது முன்னோரின் வாழ்க்கையும் நமது எதிர்கால வாழ்க்கையும், இச்சாதி வித்தியாசத்தாலே பாதிக்கப்பட்டதாயும் பாதிக்கப்படுவதாயுமிருக்கிறது. நமது நாட்டின் தற்கால கேவல ஸ்திதிக்கு ஜாதி வித்தியாசமே காரணம். அநேக நூற்றாண்டுகளாக அயல் நாட்டாருக்கு அடிமைப்பட்டிருக்கும் துரதிர்ஷ்ட நாடு இந்தியா ஒன்று தான். அயல் நாட்டாரின் ஆதிக்கத்தில் ஒரு நூற்றாண்டுக்கு மேல் அடிமையாய்க்கிடந்த ஏதாவது ஒரு நாடு இருப்பதாக உலக சரித்திரத்தில் காட்ட முடியுமா?

இதற்குக் காரண மென்ன? நாட்டின் ஒற்றுமையையும் வலிமையையும் சுயமரியாதையையும் வீரத்தையும் குலைத்துக் கொண்டிருப்பது எது? ஒரு ஜாதியைச் சேர்ந்த ஜனங்களை மற்றொரு ஜாதியைச் சேர்ந்த ஜனங்களோடு சேரவொட்டாமல் தடுத்துக் கொண்டிருப்பதும் இரு வகுப்பாருக்கும் பரஸ்பர துவேஷத்தைக் கிளப்பிக் கொண்டிருப்பதும் எது? இதற்கெல்லாம் காரணம் இந்த ஜாதிக்கட்டுப்பாடும், ஜாதிவித்தியாசமுமே தான்.

வகுப்பு மகாநாடுகளும் ஒற்றுமையும்

இத்தகைய வகுப்பு மகாநாடுகளால் தேசிய ஒற்றுமை அற்றுப்போகும் என்று குறை கூறுபவரின் கூற்றுக்கு எத்தகைய ஆதாரமுமில்லை என்று திருவாளர் எதிராஜுலு நாயுடுகாருவர்கள் சொன்னது முற்றும் உண்மையே யாகும். அப்பெரிய ஜன நாயக இயக்கமாகிய பார்ப்பனரல்லாதார் இயக்கத்தைப் பற்றியும் இக்குறையே தான் கூறப்பட்டது. நம் மகாநாட்டைப்போல் இன்னும் எத்தனையோ வகுப்பு மகா நாடுகள் நம் நாட்டில் நடைபெற்றுக் கொண்டு வருகின்றன. சங்கரன் இயக்கத்தையும் ஹிந்து மகாசபையையும் ஆதரித்தும் தாங்கியும் பேசிய திருவாளர் லாலாலஜபதிராய் அவர்களின் பிரசங்கத்தைப் பார்த்துப் பார்க்கும்படி நான் கேட்டுக்கொள்ளுகிறேன் அப்படிக்கிருக்க பார்ப்பனரல்லாதார் இயக்கமும் நாயுடுமார்கள் மகாநாடும் எப்படி வகுப்பு வாதத்தை வளர்ப்பதாகவும் தேசியத்திற்கு விரோதமானதென்றும் எனக்கு விளங்கவேயில்லை. நாயுடு வகுப்பாரை விருத்தியாக்குவதே இம்மகாநாட்டின் நோக்கமாகும். நம் நாட்டிலும் இன்னும் மற்றைய இடங்களிலும் என்னென்ன நடந்து கொண்டுள்ளன என்பதைத் தெரிந்து கொள்ளவும் எவ்விதத்தில் நம் வகுப்பாரை விருத்திபாக்கலாமென்பதைத் தெரிந்துகொள்ளவும்எவ்விதத்தில்நாமபிவிருத்தியடையவேண்டும் என்பதைத் தெரிந்து கொள்ளவுமே இம்மகாநாட்டை நாம் கூட்டினோம். நாயுடுகளுக்குள்ளேயே, கம்மவார்கள் தெலுங்கர்கள் வெலமர்கள் முதலிய அநேக உட்பிரிவுகள் இருப்பதைக் கண்டு நான் வருந்தாமலிருக்க முடியவில்லை. இவ்வாறு உடைந்திருக்கும் உட்பிரிவுகளையெல்லாம் ஒற்றுமைப்படுத்தி விட்டால் தேச ஒற்றுமைக்கும் தேச முன்னேற்றத்திற்கும் பாடுபட்டதாகாதா? ஒற்றுமைப்படுத்தும் பல வழிகளுள் இவ் வகுப்பு மகாநாடுகளும் ஒருவழியாகும். இத்தகைய மகா நாடுகளால் பார்ப்பனரும், நாமும், தீண்டப்படாதவர்கள், என்பவர்களும் ஒன்று சேர்க்கப்பட்டு இந்தியாவை ஒன்றுபட்ட உத்தம நாடாக்க முடியும்.

அடிமைத்தனம் நீங்க வேண்டும்

நான் ராஜீய விஷயங்களைப்பற்றி ஒன்றும் பேசப் போவதில்லை ஏனெனில் இம்மகாநாட்டுக்கும் இராஜீய விஷயங்களுக்கும் யாதொரு சம்பந்தமுமில்லை. இந்தியா நாட்டில் இராஜீய அடிமைத்தனத்தை விட மதத்தின் பேரால் ஏற்பட்டிருக்கிற அடிமைத்தனந்தான் மிக்க கொடூரமானதாயிருக்கிறது, மதப் போர்வையைப் போர்த்திக் கொண்டிருப்பவர்களால் நமக்கு கை விலங்கு கால் விலங்குகளும் பூட்டப்பட்டிருக்கின்றன. நமக்குச் சுதந்திரமே இன்னதென்று தெரியாதபடி மதத்தின் பேரால் நாம் குருடர்களாக்கப் பட்டுவிட்டோம். பிரிட்டிஷாரின் ஆளுகைக்குப் பின் நாட்டில் சுதந்திர யோசனையும் மதவிஷயத்திலும் அபிப்பிராய விஷயத்திலும் சுதந்திரமும் சுயேச்சையும் வந்திருப்பதாகவும் சொல்லப்படுகிறது. இப்படிச்சொல்லி விடுவது சுலபந்தான். இப்படி யெல்லாம் பிரிடிஷ் அரசுக்குப்பின் நாட்டில் சுதந்திர தாகம் கிளம்பிவிட்டது என்பதற்கெல்லாம் அடிமைத்தனத்தை அடிப்படையாகக் கொண்ட மனப் பான்மையே தான் காரணம். இத்தகைய அடிமை புத்திக்குக் காரணங்களாயிருப்பவை தெரியாத தன்மையும், ஞானமின்மையும், கல்வியின்மையுமே தான். நூற்றுக்கணக்கிலும், இலட்சக் கணக்கிலும், கோடிக் கணக்கிலும், சமுதாய விஷயங்களிலும், மதக் கொடுங்கோன்மையின் பயனாகவும், வயிறார உண்ண உணவும் உடுத்த உடையுமின்றி அடிமைகளாய் வாழ்வதை நாம் இன்றும் நம் கண்களால் பார்த்துக் கொண்டிருக்கும்போது நம்நாட்டில் சுதந்திர உணர்ச்சி தோன்றி ஜனங்களுக்கு சுதந்திரத்தைக் கொண்டு வந்து விட்டது என்று சொன்னால் யாரால்தான் நம்ப முடியும்?

துரைசாமி அய்யங்கார்.

'ஹிந்து' பத்திரிகையில் ஜனவரி மாதம் முதல் தேதி யன்று மிஸ்டர் ஸி. துரைசாமி அய்யங்கார் எம். எல். ஏ. அவர்களால் எழுதப்பட்ட ஒரு கடிதம் பிரசுரிக்கப் பட்டிருந்தது மதுரை பார்ப்பனரல்லாதார் மகாநாட்டில் நான் பேசியதிலுள்ள எல்லா விஷயங்களைப் பற்றியும் அக் கடிதத்திலெழுதிவிட்டு கடைசியில் "இதைவிட கொஞ்சம் அன்பு அதிகமாகவும் துவேஷமில்லாமலுமிருக்க வேண்டும்" என்று முடித்திருக்கிறார். பரஸ்பரம் அன்பு உண்டாகும்படி பேச வேண்டுமென்று எனக்கும் என் நண்பர்களுக்கும் மிஸ்டர் துரைசாமி அய்யங்கார் புத்தி சொல்லுகிறார். நானும் அதே பரஸ்பர அன்பை உண்டாக்க முயற்சி செய்யுமாறு அவரைக்கேட்டுக் கொள்வதுடன், நானும் என் நண்பர்களும் எத்தகைய மேம்பாடான கொள்கைகளைக் கொண்டு செய்யும் காரியங்கள் செய்து வருகிறோமோ, அதேவிதமான மேம்பாடான மனப்பான்மையுடன் அவற்றை நோக்குமாறும் கேட்டுக்கொள்ளுகிறேன். இன்னும் மிஸ்டர் ஐயங்கார் என்ன சொல்லுகிறார் என்பதைச் சற்றுக் கவனியுங்கள். அரைப் படிப்பும், படிப்புவாசனையுமில்லாத பார்ப்பனப் புரோகிதர்களின் பாதங்களை புண்ணியம் பெறும் முட்டாள் எண்ணத்துடன், பார்ப்பனரல்லாதார் கழுவ வேண்டுமென்றிருக்கும் வழக்கமானது சுயமரியாதை யற்றதும அடிமைத்தனமானதுமாயிருக்கின்றது என்று நான் என் மதுரைப்பிரசங்கத்தில் சொன்னேனா இவ்விஷயத்தைப் பற்றி ஒன்றுமே சொல்லாமல் மிஸ்டர் ஐயங்கார், "சர். கே. வி. ரெட்டி, 'சர்' பட்டம் தனக்கு வழங்கப்பட்ட போது என்ன செய்தார்?" என்று எனக்கு எதிர் கேள்வி ஒன்று போட்டிருக்கிறார். மாட்சிமை பொருந்திய அரச சக்ரவர்த்தியின் பிரதிநிதியாகிய வைசிராயின் முன் "எனக்கு 'சர்' பட்டம் வழங்கப்பட்டபோது நான் வணங்கி னேனென்பது உண்மை தான். சக்ரவர்த்தியோ அல்லது அவருடைய பிரதிநிதியோ தான் எனக்கு அப்பட்டத்தை வழங்கமுடியும். இதிலிருந்து துரைசாமி அய்யங்காரின் எண்ண மென்னவென்றால் மாட்சிமை தங்கிய அரசசக்ரவர்த்தியை வணங்கும் நான் பார்ப்பனப் புரோகிதன் காலை ஏன் கழுவக்கூடாது என்பதேயன்றோ? பார்ப்ப

னைப் புரோகிதனும் மாட்சிமை தங்கிய சக்கரவர்த்தியும் சமம்தான் என்பதை என்னை ஒப்புக்கொள்ளும்படி சொல்லுகிறார். மிஸ்டர் துரைசாமி அய்யங்காரைப் போன்றவர்களுடைய அகம்பாவத்தையும், குறும்புத்தனத்தையும், நாம் சரியாக அறிந்து கொள்ள முடியவில்லை. மிஸ்டர் அய்யங்கார் பட்சபாதமற்ற மனத்தினராயிருப்பாராகில் மனிதத் தன்மைக்கே அருவருப்பான இக்கால் கழுவுங் கைங்கரியத்தைப் பலமாகக் கண்டித்திருக்கவேண்டும். மற்றும், ஒரு பார்ப்பனன் பாதையில் போய்க்கொண்டிருக்கும்போது மிகவும் செல்வவந்தர்களும், கல்வி பயின்றவர்களுமான பார்ப்பனரல்லாத கனதனவான்களெல்லாம் தங்கள் தங்கள் இடங்களிலிருந்து எழுந்து நின்று கும்பிடும் வழக்கத்தை நான் கண்டித்துப்பேசினேன். அதற்கு அய்யங்கார் சொல்லும் சமாதானமெல்லாம், அப்படி எழுந்து நிற்றல் ஒருவருக்கொருவர் மரியாதை காட்டுவதாகச் செய்யப்படுவது என்பதேயாகும் என்கிறார். அந்த மரியாதையென்றால் இருவரையுமன்றோ அம்மரியாதை பாதிக்கவேண்டும்? பார்ப்பனரல்லாதார் எப்பொழுதும் கும்பிடுபவர்களாகவும் பார்ப்பனர்களெல்லாம் எப்பொழுதும் கும்பிடுகளை எதிர்பார்ப்பவர்களுமாய் ஏன் இருக்கவேண்டும்? அத்தகைய பரஸ்பர மரியாதைகளைப் பற்றி நமது ஐயங்கார் நண்பருக்கு ஒருவேளை தெரியாதிருக்கலாமே! எந்தக்காலத்தில், எந்த நாளில், எந்த நிமிஷத்தில் ஒரு குறிப்பிட்ட வகுப்பார்களை மற்றையோரெல்லாம் கும்பிட்டு வணங்கி மரியாதை செய்யப்பட்டதோ அதே காலத்தில், அதே நாளில், அதே நிமிஷத்தில் இந்திய நாட்டின் வீழ்ச்சியும், இந்திய நாட்டின் அடிமைத்தனமும் ரிஜிஸ்டர் செய்யப்பட்டு விட்டது என்று நான் சொல்லுவேன். நம்முடைய சகோதரன் ஒருவனை அடிமையாக்குவதும், பார்த்தும் மௌனம் சாதித்துக்கொண்டிருப்பதும், மனித வர்க்கத்தையே அடிமைக் குழியில் அமிழ்த்துவது போன்றதாகும் என்று நான் நினைக்கிறேன். காலசக்கரமானது சுழன்று கொண்டே போகப்போகவும், நாகரீகமும் மென்மேலும் விருத்தியாகிக்கொண்டே வரவும் இதுவரையிலும் அடக்கி வைக்கப்பட்டிருந்த பாமர ஜனங்கள் தங்கள் பொறுப்புக்களைத் தாங்களே கொஞ்சம் கொஞ்சமாக உணர்ந்து கொண்டதின் பலனாய் தன் வலுவையும், மதசமூதாய அரசியல் விஷயங்களில் தனக்குக் கிடைக்க வேண்டிய நியாயமான விகிதாசார பங்கையும், மனிதனுக்கு மனிதன் எந்த விஷயத்திலும் ஏற்றத் தாழ்வு இல்லையென்றும், எல்லோரும் சமம் என்றும் ஆகிய இன்னோரன்ன உத்தமகுணங்களும் தத்துவ முறைகளும், மக்களிடை தோன்றுதலும், அதன் பயனாய்ப் புதிய உத்சாகங்களும், புதுபுது உணர்ச்சிகளும் தோன்றுவதும், இயற்கையே ஆகும். ஆனால் ஜாதி வித்தியாசமென்பது சமத்துவமின்மையை வளர்த்துச்செல்வதாயிருக்கிறது. கிருஸ்துவ மிஷனரிகளும், போதகர்களும், தங்கள் "பைபிலை"ப் படிக்கும்படி எல்லோருக்கும் பலவந்தமாய்க் கெஞ்சிவந்து இலவசமாயும் கொடுத்துக்கொண்டும், முகமதிய முல்லாக்கள் தங்கள் "கொரானை"ப் படிக்கும்படி எல்லோரையும் பலவந்தப்படுத்திக்கொண்டிருக்கும்போது, ஹிந்து மதத்திற்கே மூலகாரணமானது அடிப்படையாயிருப்பதாகவும் சொல்லப்படும் "வேதங்களை"ப் பார்ப்பனரல்லாதார் படிக்கக்கூடாதென்று சொல்லுவது ஏன் என்று என் மதுரைப் பிரசங்கத்தில் கேட்டிருந்தேன். சமஸ்கிருதத்திலுள்ள வேதங்களைப் படிக்கக்கூடாது என்றால் ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்டிருப்பதை வாசிக்கும்படி மிஸ்டர் அய்யங்கார் எனக்குத் தோது சொல்லுகிறார்! நான் வேதத்தைப் படித்திருக்கிறேன். அதிலடங்கிய ஞானத்தை விருத்தியாக்குவதற்கு ஒன்றுமே சொல்லவில்லை. மற்றும் அதில் நாம் தெரிந்து கொள்வதற்குரிய சிலாக்கியமான விஷயங்கள் ஒன்றுமே யில்லை யென்றும், நான் தெரிந்து கொண்டேன். நான் இந்த நோக்கத்தைக்கொண்டு இவ்விஷயத்தைப் பிரஸ்தாபிக்கவில்லை. அச்சுத்தொழில் தெரியாத காலத்திலே வேதத்தைத் தவிர வேறு புஸ்தகம் எதுவும் இல்லாதிருந்த காலத்திலே, வேதமானது கர்ணபரம்பரையாக ஒருவருக்கொருவர் சொல்லிக்கொடுத்தும் மனப்பாடம் பண்ணிக்கொண்டும் வந்த கல்வியேயில்லா அக்காலத்திலேயுங்கூட பிராமணரல்லாத பெருங் கூட்டத்தாராகிய நாம் வேதத்தைப்பற்றியே ஒன்றும் தெரிந்துகொள்ளக் கூடாது என்ற கட்டு திட்டம் ஏற்பட்டிருந்ததென்றால் அதன் அர்த்தமென்ன? பார்ப்பனரல்லாதாராகிய பெருங் கூட்டத்தினர் கல்வியைக் கற்கவே கூடாது என்பதல்லவோ பழக்கமாயிருந்திருக்கவேண்டும்! இத்தகைய தடைச்சட்டம் ஆரம்பத்திலிருந்தும் தலைமுறை தலைமுறையாகவும், நூற்றாண்டுக் கணக்கிலும், பார்ப்பனரல்லாதாராகிய மகா ஜனங்கள் கல்வி கற்பிக்கப்படாமலே வைக்கப்பட்டிருந்ததுடன், ஒரே ஜாதியைச் சேர்ந்தவர்கள், அதாவது பார்ப்பனர்கள் மட்டும் படித்து வந்ததின் பயனாய், பிரிட்டிஷ் கவர்ன்மெண்டு இந்நாட்டில் ஸ்தாபிக்கப்பட்டு 200 வருடங்களாகியும், கல்வி விஷயத்தில் பார்ப்பனரல்லாதார் 100க்கு 10 பேருக்குக்கூட கையெழுத்துப்போடத்தெரியாததைக் காண்கிறோம். சில பாடசாலைகளிலே சில பார்ப்பன உபாத்தியாயர்கள் பார்ப்பனரல்லாத பிள்ளைகளைப் பார்த்து "படிப்பைப் பற்றி உங்களுக்கேன் கவலை? நிலத்தை உழவும், வியாபாரம் செய்யவும் போகிறது தானே" என்று புத்தி சொல்லி வந்ததை நான் அறிவேன். என்ன பக்தி! எவ்வளவு தயாள குணம்! ஆனால் "கல்வியைக் கல்விக்காகவும் ஞானத்திற்காகவும் படிப்பது" என்ற உயர்ந்த தத்துவத்தை அந்த தயாள குணவந்தர்கள் மறந்துவிடுகின்றனர்! கல்வி வயிற்றுப் பிழைப்புக்குத்தான் என்று நினைக்கின்றனர் போலும்! "கல்வியை கல்விக்காகவும் ஞானத்திற்காகவும் கூட பார்ப்பனரல்லாதார்கள் ஏன் படிக்கவேண்டும்" என்று ஒருவேளை பார்ப்பன உபாத்தியாயர்கள் கேட்பரோ என்று பயப்படுகிறேன்!

மகா நாட்டின் வேலைகள் நான்கு

இம் மகாநாடானது நான்கு வேலைகளைச் செய்து முடிக்க வேண்டியிருக்கிறது. மத விஷயத்தைப்பற்றி நான் முன்னமே சொல்லி விட்டேன். மத விஷயத்திலும் மனிதனுக்கும் மனிதனுக்கும் உள்ள வித்தியாசங்களும் தொலைய வேண்டும். ஒவ்வொரு மனிதனும் ஆலயத்துள் தாராளமாய்ப்பிரவேசித்துக் கடவுளைத் தன்னிஷ்டம்போல் பூஜிக்கும் சுதந்திரம் வரவேண்டும். மனிதனுக்கும் கடவுளுக்கும் மாத்தியில் தரகன் வேண்டாம்.

கல்வி.

இரண்டாவதாகக் கல்வியை எடுத்துக்கொள்வோம். கடந்த ஆண்டு மகாநாட்டில் ஒரு நிதியை சேகரித்து அதிலிருந்து சென்னை நகரில் ஒரு ஹாஸ்டல் கட்டவேண்டுமென்ற தீர்மானம் நிறைவேறியதே யொழிய வேறொன்றும் நடந்ததாகத் தெரியவில்லை. அடுத்த மகாநாடு கூடுவதற்குள்ளாகவாவது நாம் கொஞ்சம் காரியசித்தியடைந்தவர்களாய் விடுதற்கு வேண்டிய முயற்சிகளைச் செய்தல் வேண்டும். ஹாஸ்டல் கட்டுதற்காக ஒரு நிலம் வாங்க முயற்சிகள் நடந்துகொண்டிருப்பதாக திருவாளர் மதுரை கோபால நாயுடு அவர்கள் சொல்லுவதைப் பார்த்து நான் சந்தோஷமடைகிறேன்.

சத்தியமூர்த்தியின் மசோதா.

கல்வியைப் பற்றிப் பேசும் போது சமீபகாலத்தில் நமது சென்னை சட்டசபையில் கல்வியைப் பற்றி நடந்த சில ஆச்சரியமான சம்பவங்களைச் சொல்லாமலிருக்க முடியவில்லை. சென்னை யுனிவர்சிடி சட்டத்தைத் திருத்துவதற்காக மிஸ்டர் சத்தியமூர்த்தி அய்யரால் கொண்டு வரப்பட்ட மசோதா முதலாவது தடவையாக சட்டசபையில் படிக்கப்பட்டு விட்டது. இதை பார்த்த பிறகாவது பார்ப்பனரல்லாத கட்சிக்கு அவசியமேயில்லை என்றவர்களும், அக்கட்சி தேசமுன்னேற்றத்திற்குத் தடை யென்று சொன்னவர்களும், பார்ப்பனரல்லாத கட்சியார் சொல்வதற்கெல்லாம் ஆதாரமில்லை யென்று சொன்னவர்களும், பார்ப்பனரல்லாதகட்சி சிறு பிள்ளைத் தனங்களை யெல்லாம் காட்டியும், வருகின்றார்களென்று சொன்னவர்களும், "சுயராஜ்யம் பார்ப்பன இராஜ்யம்" என்று நாம் சொன்னபோது அது வீண் பயமென்றும் அது பொய்யென்றும் சொல்லி வந்தவர்களுமாகிய இவ்வளவு பேரும், தாங்கள் இதுவரையில் நினைத்திருந்தது பிசகென்றும் பார்ப்பனரல்லாதார் கட்சியினராகிய நாம் சொல்லி வந்ததெல்லாம் தான் உண்மையென்றும் தெரிந்துகொண்டிருப்பார்களென்றே நம்புகிறேன். சர். ஏ. பி. பத்ரோ அவர்கள் அம்மசோதாவைக் "குப்பை" என்றார். நான் அம்மசோதா ஆலகால விஷத்திற்குச் சமானமென்று நினைக்கிறேன். யூனிவர்சிடியைச் சார்ந்த பிரதிநிதித்துவ ஸ்தாபனங்களில் பார்ப்பனரல்லாதாருக்கிருக்கும் பிரதிநிதித்துவத்தையும், மகாஜனசபை அதிகாரங்களையும், செல்வாக்கையும் கொன்று பார்ப்பனரல்லாதவர்களின் கல்வி அபிவிருத்தியையும் கொலை செய்வதற்காகவே தயார் [illegible] மசோதா அது [illegible] செய்யப்பட்ட விஷமமாகும். அம்மசோதா சர்வாதிகாரமும், இவ்வியாபாரம் செய்வதற்காகச் செனட்டிலுள்ள அங்கத்தினர் தொகையைக் குறைப்பதற்காகவே தான் மசோதாவைக் கொண்டு வந்ததாகத் திரு. சத்தியமூர்த்தி அய்யர் சொல்லுகிறார். அது வெளியிலுள்ள ஜனங்களை ஏமாற்றுவதற்குச் சொல்லும் பேச்சாகுமேயொழிய உண்மையல்ல. திரு. சத்தியமூர்த்தியின் உண்மைக் கருத்தென்னவென்றால் உயர்தர யுனிவர்சிடி படிப்பைப் பற்றி ஆலோசித்து முடிவு செய்யும் அதிகாரம் கொண்ட செனட்டில் வீற்றிருக்கும் சில பார்ப்பனரல்லாதாரையும் அவ்விடத்திலிருந்து துரத்திவிடுவதற்காகவே அம்மசோதா கொண்டுவரப்பட்டுள்ளது. சூரியனையும் ஞானத்தையும் பார்ப்பனர்களின் நன்மைக்காகத்தானே கடவுள் படைத்தார்! பார்ப்பனரல்லாதாருக்கு ஞானமும், கல்வியும் எதற்காக. பார்ப்பனரல்லாதாருக்கு யாதொரு சுதந்திரமுமே கிடையாது; செனட்டிலுள்ள எண்ணிக்கையைக் குறைக்க வேண்டுமென்பது தான் திரு. சத்தியமூர்த்தியின் உத்தேசமானால், அது உண்மையானால் தேர்ந்தெடுக்கும் எல்லாத் தொகுதிகளிலும் விகிதாசாரப் பிரகாரம் எண்ணிக்கைகளைக் குறைக்கச் சொல்லியிருக்கலாம். திரு. சத்தியமூர்த்தி அய்யர் அவ்வாறு செய்வாரா? ஒருக்காலும் செய்யமாட்டார்! யுனிவர்சிடியைப் பழையபடி அக்கிரகாரமாக்கவும், பூணூல் மயமாக்கவும் நினைத்திருக்கும் திரு மூர்த்தியின் ஆத்திரமெல்லாம் ஜில்லா போர்டுகளின் பேரிலும் முனிசிபாலிடிகளின் பேரிலும் தான். முனிசிபாலிட்டிகளுக்கும் ஜில்லா போர்டுகளுக்கும் இப்பொழுது இருக்கும் பிரதிநிதித்துவத்தை எடுத்து விட்டு, பட்டதாரிகளால் தேர்ந்தெடுக்கும் படியான தொகையுடன் இன்னும் பத்து எண்ணிக்கைகளைச் சேர்க்கவேண்டுமென்று திரு மூர்த்தி தன் மசோதாவில் கண்டிருக்கிறார். திரு சத்தியமூர்த்தி அய்யர் கொண்டு வந்த மசோதா இவ்வளவுதான். ஆனால் அதனுள் அடங்கிய ஆபத்துகள் பூட்டப்பட்டிருக்கின்றன.

[தொடரும்]

தலை பின்னையாக, ஸ்ரீமான் முதலியாருடன் ஏன் போட்டி போட்டார் என்று கேட்கிறோம். காங்கிரஸ் ராஜீய அபிப்பிராயத்தோடு தானே அந்த பார்ப்பனரல்லாதார் முன்னேற்றத்திற்கு என்று சில தீர்மானங்கள் வந்தது. அதில் உள்ள ராஜீய அபிப்பிராயம் இவருக்கு ஆக்ஷேபணை இல்லாதபோது சமூக அபிப்பிராயந்தானே வித்தியாசமாயிருந்தது என்று சொல்லக்கூடும். அதாவது வகுப்புவாரி உரிமை. அதுபோலவே ஜஸ்டிஸ் கட்சியில் உள்ள ராஜீய அபிப்பிராயம் எடுத்து விட்டால் அதில் மீதி என்ன இருக்கும். வகுப்புவாரி உரிமைதானே இருக்கும். வகுப்புவாரி உரிமையைப் பற்றி போனவருஷம் ஸ்ரீமான் வரதராஜுலு நாயுடு இதை ஒரு அபிப்பிராயம்தானே சொல்லி வருகிறார். அப்படி இருக்கும்போது இவர் சேர்ந்த ஒரே கொள்கையாயிருப்பார் என்பதற்கு என்ன உறுதி இருக்கிறது? அது தான் போகட்டும், மதுரையில் நடந்த பார்ப்பனரல்லாதார் மகாநாட்டின் போது எல்லா பார்ப்பனரல்லாதாரையும் அவர்கள்; அதாவது பார்ப்பனரல்லாதார் விஷயத்தில் அக்கறை உள்ளவர்கள் ஒவ்வொருவரும் வந்து தங்கள் தங்கள் அபிப்பிராயங்களைச் சொல்லும்படி கேட்டுக்கொண்டார்களே அப்பொழுது ஸ்ரீமான் வரதராஜுலு நாயுடு என்ன அபிப்பிராயம் கொடுத்தார்? அல்லது தான் வராததற்கு என்னகாரணம் சொன்னார் என்றுதான் கேட்கிறோம். தனக்கு ஏதாவது ஒரு அபிப்பிராயம் இருந்திருக்குமானால் சொல்லி இருக்கலாமா இல்லையா? பின்னும் அந்த மகாநாடு நடைபெறுதிருக்கவும் சில பார்ப்பனரல்லாதாரையாவது மகாநாட்டுக்குப் போகாமலிருக்கும்படி தடுக்கவும் பிரயத்தனப்பட்டு அதே சமயத்தில் தானும் ஒரு மகாநாடு கூட்டுவதாய் வெளிப்படுத்தினாரே ஒழிய அப்படியாவது கூட்டி ஏதாவது ஒரு ஏற்பாடு செய்தாரா என்று கேட்கிறோம். தவிர முடிவாக ஒரு வார்த்தை என்று,

"பிராமணீயத்தை ஒழித்து சமத்துவத்தையும் அடிமைத்தனத்தையும் ஒழித்து சுயராஜ்யத்தையும் ஸ்தாபிப்பதில் யார் குறுக்கே நின்றாலும் தான் பயப்படப்போவதில்லை" என்று எழுதுகிறார். இந்த இரண்டும் வாயில் சொல்லிக்கொண்டிருப்பதை விட காரியத்தில் செய்ய இவருடைய கொள்கை என்ன? திட்டம் என்ன? முதல் என்ன?" என்று மறுபடியும் கேட்கிறோம். வெறும் பரிபாஷையால் எத்தனை நாளைக்கு ஏமாற்றுவது என்றும் கேட்கிறோம்.

அந்தப்படி யாருக்கும் பயப்படாத வீரர் ஏன் சென்ற ஒன்று இரண்டு வருஷமாக தலை காட்டாமல் இருந்தேன் என்று சொல்லிக்கொள்ள வேண்டும். கடைசியாய்,

"சத்தியம் வெல்லுமா பொய்ப்பிரசாரம் வெல்லுமா என்பதை ஒரு கைபார்க்கப் போகிறதாக" எழுதி இருக்கிறார்.

இவ்வித மாத்திரம் நாம் மனப்பூர்வமாக ஒப்புக்கொண்டு அதன் முடிவையும் எதிர்பார்க்கிறோம். ஏனெனில் சத்தியம் இன்னது பொய்ப்பிரசாரம் இன்னது என்பதை அறிய முடியாத ஜனங்கள் இனி நமது நாட்டில் அதிகமாக இல்லை என்கிற தைரியத்தினாலும் ஏற்கனவே ஜனங்கள் ஏறக்குறைய எது பொய் எது புரட்டு எது சத்தியம் என்பதை அறிந்து விட்டார்கள் என்கிற நம்பிக்கையாலுமேதான் நாம் அந்த வார்த்தைகளை மாத்திரம் ஒப்புக்கொண்டு வெகு ஆவலோடு எதிர்பார்க்கிறோம்.

வைத்தியர் வரதராஜரின் வழவழப்புக்கு வைக்கம் வீரரின் விளக்கவுரை

வைத்தியர் வரதராஜரின் பத்திரிகையாம் "தமிழ்நாடு" தினசரிப்பதிப்பாய் வெளிவந்துலவப் போவதாய் பலமாசங்களாய் விளம்பரங்களாலும் வால்போஸ்டர் போன்ற கணக்கிலா எச்சரிக்கைகளாலும் 'தமிழ்நாடு' தினசரி எப்பொழுது வந்துலவும், உலவும், என்ற ஏக்கம் மிக்கால் தமிழ்நாட்டை இரவிலும், பகலிலும், கனவிலும் சதா எதிர்பார்த்து நின்றவர்களில் நான் பிறர்க்கிளைத்தவன் அல்ல என்பது மிகைபடுத்தியதாகா. எதிர்பார்த்ததற்கொப்ப, நிஷ்டூங்கில மதியாம், ஏப்ரல் பதினைந்தாம் நாள் தமிழ்நாடு வெளிவந்ததும் அடங்கா ஆவலுடன் பிரித்துப் பார்க்கையில் மிகுந்த பழ பழப்புடைய தாளில் அழகிய வடிவத்துடன் தோன்றியபோது, அப்பத்திரிகையின் தலையங்கத்தினடியில் நம் உயர்திரு வரதராஜரால் பத்திரிகையின் கொள்கையைப் பற்றி குறிப்பிட்டுள்ள வாசகங்களை ஓர் வரியேனும் விடாது வாசித்தறிந்ததும், எதிர்பார்த்ததற்கெதிர் மாறாய் "விட்டகுறை ஆசை விளாம்பழத்தோட்டோடு" என்பதற்கொப்பாய் "தமிழ் நாடு" தினசரிப் பதிப்பின் மீதுற்ற காதல் காற்றாய்ப் பறந்ததன்றி தமிழ்நாடு, பார்ப்பன நாடாய் இலங்குமென்ற முடிவிற்கே வர நேர்ந்தது. அந்தோ? அனாதிகாலந்தொட்டின்றுவரை பார்ப்பனர்களால் ஏற்பட்ட இயம்பொணா இன்னல்களையும், எழுதிமுடியா இழிவுகளையும், நாடோறும் அறிந்தும் நந்தலைவர் வரதராஜர் இன்னும் நந்தமிழர்களுக்குரிமைகளல்லவா சுயமரியாதையைக் குலைக்க முந்தாது, போலி தேசீயம் என்ற படுபாதாளக்குழியில் வீழ்த்துகின்றாரே என்றேங்கக் கொண்டு, எமதன்னையாம் தமிழ்த்தாயை நோக்கி ஹே அம்மையே! பார்ப்பனர்களின் பரிமோசங்கள் பட்டப்பகல் வெட்ட வெளிச்சமாகியும் உமதருமந்தமைந்தரும், எந்தலைவருமாகிய வரதராஜப்பெரியார் நெருக்கு உன்னாமம் சூட்டி, வீணுக்குழைக்க நாடோறும் வெளியிடும் பத்திரிகை நடத்த முனைந்ததுடன் விளக்கெண்ணெயைக் கொண்டு கை கழுவியப்போல் விழுவிழுத்த, வழுவழுத்த கொள்கையும் ஆற்றிலொருகாலும் சேற்றில் பிறிதொரு காலுமாய் நேற்றோர் அபிப்பிராயமும், இன்று பிறிதொரு அபிப்பிராயமும், இன்றோர் கண்டனமும், நாளை மற்றோர் கண்டனமுமாய் காலங்கழித்திலங்குகின்றாரே அப்பெரியார்க்கு ஞானக்கண் பார்வை தந்து நந்தமிழர்களுக்குழைக்க ஆசீர்வதித்தருள வேண்டுமென்ற அடியவனின் யாசிப்பை ஆட்கொண்டதற்கு அடையாளமாய், எதிர்பாராவண்ணம் 17-4-27 தேதி வெளிப்போந்த "குடி அரசி"ல் நம் வைக்கம் வீரப்பெரியாரால் "பழய கருப்பனே கருப்பன்" என்ற மகுடத்தின் கீழ் நம் வரதராஜரின் வழுவழுப்புக்கொள்கைக்கு தக்க விளக்கவுரையாய சவுக்கடி கொடுத்திருப்பதைக் கண்ணுற்றதும் கணக்கிலா களிபேருவகை எய்தினேன். வைக்கம் வீரரின் மெய் செறிந்த, சுயமரியாதை ததும்பிய, குற்றங் கடிவதில் கொஞ்சமும் தாட்சண்யமிலாத தைரியத்தோடு கூடிய பொன்னுரையை உண்மைத் தமிழர் எவர்தான் ஏற்றிப் போற்றாதிருக்க இயலும்?.

தலைவர் வரதராஜரவர்களே! வைக்கம் வீரரின் மணிவாசகத்தை சில முறைக்கு பல்முறை படித்தாராய்ந்திடின் சினங்கொள்ளாது குணங் கொள்வீர்கள் என்பதென் துணிபு. மேலும் தற்காலம் 'தேசிய காங்கிரஸ்' "காந்தி சீடர்" என்ற கன்னக்கோல் காத்திலேந்தி தமிழர்களின் மதிப்பிடத்தகாத மாணிக்கமாம் சுயமரியாதையைக் கொள்ளை கொண்டு தம்மினத்தார் இந்திரபோகம் அனுபவிக்க இணை இலா தந்திரம், மந்திரம், சூது, வாது, மோசம், செய்துவரும் அயவர்களின் கூட்டுறவைத் தாங்கள் நாடுவதின் நோக்கந்தான் என்னையோ? வைக்கம் வீரரின் வாசகத்திற்காகப் பார்ப்பனரினுமே பரமசாயுட்சியம் அளிக்க வல்லதெனக் கொள்ளின் அது தங்களின் பாக்கியமோ, பாவமோ, அதைப்பற்றி சிந்திப்பாரெவருமிரார், என்றாலும் நந்திராவிட ரத்தினங்களுக்கு சகல வழிகளிலும் உய்யும் வழி கோலி, நாயர், ருயா, பெருமான்களால் கண்ட நியாயகட்சியைத் தாக்க முற்படுவீர்களாகில், தமிழ் மக்களின் சாபம் தப்பாது தங்கள் தலையில் வீழ்ந்தாழ்த்தும் என்பதை வெகுவினயத்துடன் விளம்புகிறேன். சுபம்

பார்ப்பனீயம் படுகுழி புக,
சுயமரியாதை வளருக.

ரு. க பெருமாள், திருமலைபுரம்

மதிப்புரை.

பிரபவ வருடத்து தட்சிணாமூர்த்தி காலெண்டர் 12 பக்கமுள்ளது. ஒன்று வரப் பெற்றோம். அதில் தமிழ், ஆங்கிலத் தேதி, மாதம் தேதி, வாரம்; குளிகை, வாரசூலை, விசேஷ நாட்கள் முதலிய மனிதவாழ்க்கைக்குரிய குறிப்புகளுடனும், ஒவ்வொரு இதழ்களிலும் ஒவ்வொரு வர்ணங்களால் தட்சிணாமூர்த்தியின் அழகிய உருவமும் பொலிந்து இக்காலெண்டரை அலங்கரிக்கிறது. இதன் முதலில் அழகிய எழுத்துக்களால் நந்தமிழ் புது வருடத்திய வாழ்த்துப் பாவும் அமைத்துக் கண்ணுற்றோருக்கு புதிய ஊக்கத்தையளிக்கத்தக்கதாகவும் விளங்குகிறது. கிடைக்குமிடம்

சிவத்தியானந்த மஹரிஷி
வேத கழக அச்சுக்கூடம்,
ஈஸ்டு—ரங்கூன்.

திருப்பூர் கத்தர் பனியன்கள்.

கைராட்டின நூலினாலேயே தயார் செய்யப்பட்டது

விலை நயமானது **Trade**  **Mark** சரக்குமேலானது

28 இஞ்சு டஜன் 1க்கு	7—14—9	32 இஞ்சு டஜன் 1க்கு	8—10—0
30 ,,	8—4—0	34 ,,	9—0—0

Registered.

உங்களுக்கு வேண்டிய சுத்தக்கதர் பனியன்களுக்கு எங்களுக்கே ஆர்டர் செய்யுங்கள். ஒவ்வொரு பனியன்களிலும் கைராட்டினம் அடையாளம் இருக்கிறதா வென்று கவனித்து வாங்கவும். ஒரே தடவையில் ஒரு டஜன் பனியன்களும் அதற்கு மேலும் கொண்டு வாங்குபவர்களுக்கு ரூபாய் ஒன்றுக்கு ஒரு அணா விதம் கமிஷன் கொடுக்கப்படும். மானேஜர்:—

M. V. K. Khaddar Banian Works, Tirupur (S India.)

டெண்டர் விளம்பரம்.

1927-28ம் வருஷத்திற்கு இரண்டாவது வகுப்பு மூன்றாவது வகுப்பு டிஸ்டிரிக்டு போர்டு ரோட்டுகளை பரிபாலிப்பதின் விஷயமாக முத்திரையிட்ட டெண்டர்கள் தேவை. அவைகள் 1927ம் வருஷம் ஏப்ரல் மாதம் 28ம் தேதி வியாழக்கிழமை தினத்திற்குள்ளாக டிஸ்டிரிக்டு போர்டு இஞ்சினீயர் அவர்களுக்கு வந்து சேரவேண்டும்.

ரோட்டுகளைப்பற்றிய விவரங்களும், ஒப்பந்த (கண்ட்ராக்ட்) நிபந்தனைகளும், டெண்டர் பாரங்களும் கோயமுத்தூர் ஜில்லா போர்டு இஞ்சினீயர் ஆபீசிலும், சம்பந்தப்பட்ட சப்டிவிஷன் ஆபீசிலும், ஓவர்சீயர் ஆபீசிலும் கிடைக்கும்.

(ஒப்பம்) ஆர். எல். மல்லாய்
ஜில்லா போர்டு இஞ்சினீயர்,
கோயமுத்தூர்

தாய்மார்கள்
கவனிக்கவேண்டியது.

சில தாய்மார்களுக்கு பலவித காரணங்களால் பால் சுருங்கி சிசுக்கள் சகிப்பதை நிவர்த்தி செய்து பால் வளரும்படி செய்ய நம்மால் ஒரு தேங்காய் ஜெபித்து வி. பி. செய்யப்பட்டுவருகிறது. 20 வருடக்கு அனுபவம், எம்மதஸ்தாரும் வாங்கலாம். அனுப்பும் விதம் தேங்காயுடன் அனுப்பிவைக்கப்படும் இதன் விலை தபால் செலவின்றி ரூ 1—4—0 மாத்திரம்.

குறிப்பு:—காத்துக்கருப்பு விஷயத்திற்கும் தேக சம்பந்தப்பட்ட வியாதிகளுக்கும், மந்திரத்தாலும் மருந்தாலும் சிகிச்சை செய்யப்படும்.

விலாசம்:—

எ. எஸ். எ. மாந்ரீக டாக்டர்
ஒதுவார் வீடு,
சின்னகடைத்தெரு, தெப்பகுளம், திருச்சி.

மூன்று மாதத்தில் மோட்டார் ஓட்ட கற்றுக் கொள்ளலாம்

1916௵ ஸ்தாபிக்கப்பட்டது.

எங்கள் கம்பெனியில் மோட்டார் வண்டிகளை ஓட்டவும், பிரிக்கவும், பூட்டவும் வேறு பல ரிப்பேர் திருத்தங்கள் செய்யவும் கற்றுக் கொடுக்கப்படும். தேர்ச்சியுடைய மூன்று மாதம் ஆகும். தேர்ச்சி அடைந்த பின்பு கவர்ன்மெண்டு லைசென்சும் எமது கம்பெனி சாடிபிக்கேட்டும் கொடுக்கப்படும்.

மற்ற விபரத்திற்கு நேரில் எழுதி தெரிந்துகொள்ளலாம்.

மதராஸ் தென்னிந்தியா
மோட்டார் இன்ஜினீயரிங் ஒர்க்ஸ்,
மைலாப்பூர்-மதராஸ்.

சர்பத் சத்து.
கோடை காலத்திற்கோர் குளிர்ந்த பானம்.

ஒரு டம்ளர் சுத்த ஜலத்தில் 5 சொட்டு சர்பத்து சத்து சேர்த்தால் போதுமானது. குளிர்ந்த மணமும் மதுரமான ருசியையும் கொடுத்து தாகத்தை தணிக்கச் செய்யும். பழங்களின் சத்துக்களும், தித்திப்பும் இதில் அடங்கியிருக்கின்றன. மற்ற பானங்களைவிட குறைந்த விலையுள்ளது. 50 வேளை உபயோகிக்கக் கூடிய புட்டி 1-க்கு விலை ரூ. 1.

எசன்ஸ் காப்பி:— ஒரு டம்ளர் வெந்நீர் அல்லது பாலில் ஒரு கரண்டி எசன்ஸ் சேர்த்தால் நல்ல காப்பியாகி விடுகிறது டிக்காக்ஷன் தயார் செய்ய வேண்டிய சிரமமில்லை. நினைத்த பொழுது காப்பி தயார் செய்து கொள்ளலாம்.

புட்டி 1-க்கு விலை அணா 12.

ராமஸ்பா எலக்ட்ரோ கெமிக்கல் ஒர்க்ஸ்
ஸ்ரீரங்கம் வலூர் (S. I. R.)

நல்ல சமயம்! நல்ல சமயம்!!

தற்கால நாகரிகத்திற்கேற்ற
வியாபார நடை, தொழில் நடைகளுக்கு அத்தியாவசியமான ஆங்கிலம் கற்கவேண்டுமா?

தபால் மூலம்
ஐந்தே மாதம் ஐந்தே ரூபாய்

கடந்த 7 வருஷகாலமாய் நேரில் ரூ 25க்கு கற்றுக் கொடுக்கப்பட்ட 5 மாத இங்கிலீஷ் கோர்ஸை இப்போது தபால்மூலம் தமிழ் தெரிந்த எவரும் ரூ 5 க்குக் கற்றுக்கொள்ளலாம். அநேக வியாபாரிகளும், கல்வி இலாகாத் தலைவர்களும் நற்சாட்சி பத்திரங்கள் அளித்திருக்கிறார்கள். பிராஸ்பெக்டஸுக்கு உடனே எழுதுங்கள்.

பிரின்சிபல்
காம்பிரிட்ஜ் இன்ஸ்டிட்யூட்,
நாகூர்.

15ம் பக்கத் தொடர்ச்சி

திரு சத்தியமூர்த்தி அய்யரை இப்படிப்பட்ட மசோதாவை ஆலோசனைக்கு எடுத்துக்கொள்ள வேண்டுமென்று வற்புறுத்தாமலிருக்குமாறு மந்திரியார் குறிப்பிட்டிருந்தால் நாங்களெல்லாம் மிக்க திருப்தி யடைந்திருப்போம் ஆனால் மந்திரி தான் என் செய்வார்? திரு. சத்தியமூர்த்தி அய்யர் மந்திரி சொல்லை யெல்லாம் கேட்டுக்கொண்டாடல் வாங்கிக்கொள்ளும் அவ்வளவு கோழையா? அன்றொரு நாள் திருவாளர் கோடி ரெட்டி ஒரு மசோதா கொணர்ந்தார். அதை வற்புறுத்த வேண்டாமென்று கேட்டுக்கொள்ளப்பட்டதற்கு அவரும் சம்மதித்தார். மற்றொரு நாள் திரு. சல்தானா எலிமெண்டரி எஜூகேஷன் சட்டத்தை திருத்த மசோதா ஒன்று கொண்டுவந்தார், கல்வி மந்திரியார் தானே ஒரு மசோதா கொண்டுவரப் போவதாகவும் ஆதலால் வற்புறுத்த வேண்டாமென்றும் கேட்டதற்கு திரு சல்தானா இணங்கினார். ஏன்? அவ்வாறு கல்வி மந்திரியார் திரு சத்தியமூர்த்தி அய்யரை கேட்கவில்லை அதற்குக் காரணம் என்ன? விடை மிக எளிது தான எவ்வளவு சொன்னாலும் யுனிவர்சிடி. அங்கத்தினர் செலி சாய்க்கார், இணங்கார், என்பது கனம் மந்திரிக்கு நன்றாய்த் தெரியும்! அது எவ்வாறாயினும் ஆகுக. இந்த மசோதா எங்களுக்குக் கொஞ்சமும் பிடிக்கவில்லை திருப்தி அளிக்கவில்லை. இந்த மசோதாவில் எங்களுக்குக் கொஞ்சமும் நம்பிக்கையேயில்லை, இம்மசோதா எவ்வளவு உயர்ந்தோர் எவ்வளவு பெரிய தேசபக்தர்கள், எவ்வளவு உத்தமர்கள், எவ்வளவு யோக்கியர்களால கொண்டுவரப்பட்டு ஆதரிக்கப்பட்டதாயிருந்தாலும், எங்களுக்கு அதில் சற்றும் நம்பிக்கை இல்லை. இது ஒரு பெரிய மோசமான மசோதாவாயிருக்கிறது. ஆதலால் இதை நாங்கள் எதிர்க்காமலிருக்க முடியவில்லை. எந்தகாலத்தில் ஒரு சிறந்த மசோதா, இப்பொழுது கொண்டு வந்திருப்பவரைவிட கொஞ்சம் நல்லெண்ணம் அதிக முடையவரால் கொணரப்படுகிறதோ, அது இந்தவெள்ளைக்கார கவர்மெண்டாரானாலும்சரி, சந்தேகத்திற்குஇடங் கொடா திருக்குமானால் அத்தகைய திருத்த மசோதாவை ஆதரிக்க முடியும்.

2-ம் பக்கத் தொடர்ச்சி

1923 வருஷத்திய யுனிவர்சிடி சட்டத்தைத் திருத்த வேண்டும், அதில் காணப்படும் குறைகளை ஒழிக்க வேண்டியமட்டும் குவிந்து கிடக்கின்றன என்று வானமளாவ, தொண்டை உலர மேடைகளின் மேலும் பத்திரிகைகளிலும் முதலைக் கண்ணீர் வடித்த திரு சத்தியமூர்த்தி அய்யரவர்களுக்கு இப்பொழுது "கல்விச் சபை" [Senate] யின் அங்கத்தினர் எண்ணிக்கைகள் மட்டும் கவனிக்க உதவாததாகத் தோன்றுகின்றது? தன்னுடைய மசோதாவை பக்ஷபாதமின்றி யோசனைக்கு எடுத்துக் கொள்ள வேண்டுமென்று திரு. சத்தியமூர்த்தி அய்யர் [illegible]. தான் யாதொரு வகுப்பு துவேஷத்தின் மேலும் இம்மசோதாவைக் கொண்டு வரவில்லை என்று திரு சத்தியமூர்த்தி அய்யர் சொல்லுகின்றார். 'எங்கப்பன் குதிருக்குள் இல்லை' என்று ஏன் சொல்ல வேண்டும்? அது எவ்வாறாயினும் ஆகுக. அப்பர் சொல்வதை நம்பியே பார்க்கலாம். திரு சத்தியமூர்த்தி அய்யர் ராஜீய விஷயங்களில் மிக்க யோக்கியர் என்று பெயரெடுத்து விட்டாராதலால், அவர் சொல்வதை உண்மையென்று நம்பித்தான் பார்ப்போம். கல்விச் சபை செனேட்டின் அமைப்பைப் பற்றி அவருடைய மசோதாவிலிருக்கிற பாகத்தை வேண்டுமானாலும் படித்துப் பார்ப்போமானாலும், அவர் எந் நோக்கத்தைக் கொண்டு மசோதாவைக் கொண்டு வரவில்லை யென்று நமக்குச் சொன்னாரோ, அதே நோக்கமாய் "கல்விச் சபையை" அக்கிராரமாக்குதலுக்காகவே கொண்டு வந்ததாகு மென்ற முடிவுக்கு வராமலிருக்க முடியுமா? கல்விப் பட்டம் படைக்காத வகுப்பினர் ஸ்தாபனங்களுக்குக் "கல்விச் சபையில்" பிரதிநிதித்துவம் கொடுக்கப்பட்டிருக்கிறது. இந்த பிரதிநிதித்துவத்தை இந்த ஸ்தாபனங்களிடமிருந்தும் பிடுங்கிவிட வேண்டுமென்று திரு சத்தியமூர்த்தி அய்யர் கொஞ்சமும் நாணமில்லாமல் சுத்த வீரனைப்போல் பேசுகிறார். இன்று காலையில் நான் இந்த ஸ்தாபனங்களால் தேர்ந்தெடுத்தனுப்பப்படும் பிரதிநிதிகள் யார் என்று ஆழ்ந்து படித்துப் பார்த்தேன். அப்படி அனுப்பப்பட்ட பிரதிநிதிகளுள் பி. ஏ. முதலிய பட்டதாரிகள் எத்தனை பேர், அல்லாதார் எத்தனை பேர், பிராமணர்கள் எத்தனை பேர், பிராமணரல்லாதார் எத்தனை பேர் என்பதையும் கணக்கெடுத்துப் பார்த்தேன். அப்பொழுதுதான் திரு சத்தியமூர்த்தி அய்யரின் வஞ்சனை எனக்கும் நன்கு விளங்கியது. தற்போது இம்மூவகை ஸ்தாபனங்களாலும் தேர்ந்தெடுத்தனுப்பப்படும் பிரதிநிதிகள் தொகை 48. இதில் 32 பேர் பி. ஏ. முதலிய பட்டம் பெற்ற பட்டதாரிகள். அவர்கள் மூவர் பாரிஸ்டர்களாகவும் விளங்குகிறார்கள். பி. ஏ. பட்டம் பெற்ற ஓட்டர்களால் தேர்ந்தெடுக்கப்பட்டால்தான் கல்வி மணம் யூனிவர்சிடியில் வீசிக்கொண்டிருக்குமோ? மேற்சொன்ன 32 பேர்களும் பட்டதாரிகளல்லவோ? இவர்கள் "கல்விச் சபை"யில் உட்கார்ந்தால் கல்வி வாசனைக் கெட்டுப் போய் விடுமோ? பி. ஏ. பட்டம் பெற்ற ஓட்டர்களால் அனுப்பப்பட்டால்தான் பொருத்தியோடு கைலாயம் போவதுபோலிருக்கும்? என்னே வகுப்புத் துவேஷமின்மை! என்னே [illegible] கொள்கை? எவ்வளவு தேசாபிமானம்! திரு. அய்யர் தான் சொல்லிக் கொள்வது போல வகுப்புத் துவேஷத்தால் தூண்டப்படவில்லை யென்பது உண்மையானால், சென்னைக் கார்ப்பொரேஷனாலும் அதைப் போன்ற ஜில்லா போர்டு முனிசிபாலிட்டிகளாலும் வியாபாரச் சங்கத்தாராலும் இன்னும் இதுபோன்ற பொது மக்களின் ஸ்தாபனங்களாலும் தேர்ந்தெடுக்கனுப்பப்படும் பி. ஏ. முதலிய பட்டம் பெற்ற பிரதிநிதிகள், பி. ஏ. பட்டம் பெற்ற ஓட்டர்களால் தேர்ந்தெடுக்கனுப்பப்படும் பிரதிநிதிகளைக் காட்டிலும் எவ்வகையில் தாழ்ந்தவர்கள்? அவர்களை ஏன் திரு சத்தியமூர்த்தி அய்யர் ஒழிக்க வேண்டுமென்று கங்கணங்கட்டிக் கொண்டிருக்கிறார்? உண்மையென்னவெனில், அவ்வாறு அப்பொழுது பொது ஸ்தாபனங்களாலனுப்பப்படும் 48 பிரதிநிதிகளில் 33 பேர்கள் அந்தோ! இந்த "சூத்திரக் கூட்டமாகிய" பார்ப்பனரல்லாதார்கள், 15 பேர்கள்தான் பிராமணர்கள்! அந்தோ என் செய்வது? சத்தியமூர்த்தி அய்யர்! பிராமண [illegible] புரியாததாகவே [illegible] பட்டவரல்லவா! இம்முறையை பொது ஸ்தாபனங்களின் பிரதிநிதித்துவ சுதந்திரத்தையும் பறித்து விட்டால் பி. ஏ. பட்டதாரி ஓட்டர்களிடம் கொஞ்சமும் உதவியைக் கனவிலும் எதிர்பார்க்க முடியாத [illegible] பார்ப்பனரல்லாதாரின் கதி என்ன? இம்மாதிரி எல்லாம் செய்து பார்ப்பனரல்லாத பிரதிநிதிகளை [illegible] எவ்வளவு குறைக்க முடியுமோ அவ்வளவு குறைப்பது தானே இம்மசோதாவின் உள்ளெண்ணம் [illegible] கொள்கை? [illegible] துவேஷமில்லையென்றும், கல்விச் சபையை [செனேட்] பார்ப்பன அக்கிராரமாக்கக் கொண்டு வரவில்லையென்றும் அறிக்கையால் வந்ததுபோல திரு சத்தியமூர்த்தி அய்யர் "எப்பொழுதும் எல்லோரையும் ஏமாற்றி விடலாம்" என்று எண்ணிப் பேசுகிறார். அப்படி சொல்வது உண்மையோ, பொய்யோ அவர் கொண்டு வந்திருக்கிற மசோதா நிறைவேறுமானால், பார்ப்பனரல்லாதாரைப் பகுதி பாகத்தில் தள்ளி பார்ப்பனரை பழைய படிமுறையில் உயர்த்திக் கொள்வதும், இந்த மசோதா வேண்டுமென்கிற பார்ப்பனரல்லாதாரை ஒழிக்கக் கொண்டதன் மூலம், திரு சத்தியமூர்த்தி அய்யர் ஆரம்பத்திலிருந்தே தேசபக்தியில் இறைக்கும் வழிகளிலும், பார்ப்பனரை உயர்த்தும் வழிகளிலும், மற்றையோரை ஒழிக்கும் வழிகளிலும் பழக்கப்பட்டிருக்க வேண்டும். ஆகையால்தான் இயல்பாக அவர் எண்ணங்களுக்கு நன்மை பெற்றெழுப்புகின்றனபோலும்! அவருடைய சிஷ்யர்களின் அய்யரின் கண்களுக்குப் புலப்பட்டாலும் சரி படாவிட்டாலும் சரி! அத்தனையெல்லாம் கண்ணுடைய மக்களெல்லோருக்கும் பட்டப் பகல் போல வெளிச்சமாய்த் தோன்றிக் கொண்டே இருக்கின்றன.

திரு சத்தியமூர்த்தி அய்யர் சேட்லர் கமிஷன் ரிபோர்ட்டைப்பற்றி பிரஸ்தாபித்தார். கல்வி மணம் நாலு பக்கங்களிலும் வீசுகின்ற இக்கல்விச் சபைக்கு ஜில்லா போர்டுகளிலிருந்தும் முனிசிபாலிட்டிகளிலிருந்து பிரதிநிதிகள் அனுப்பக் கூடாதென்று சேட்லர் கமிஷன் ரிபோர்ட்டில் சொல்லியிருப்பதாக திரு. சத்தியமூர்த்தி அய்யர் சொல்லுகிறார். நானும் சேட்லர் கமிஷன் ரிபோர்ட்டைப் படித்திருக்கிறேன். ஆனால் அதில் ஜில்லா போர்டு முனிசிபாலிட்டிகளும் செனேட்டுக்குப் பிரதிநிதிகளை அனுப்பக்கூடாது என்று சொல்லியிருக்கிறது? என்ன கேற்றம்? "பார்க்கமாட்டேன் என்று தீர்மானம் செய்து கொண்டிருக்கிற குருடனுக்குப் பிறவிக் குருடனும் கூட ஈடாகமாட்டான்" என்று ஆங்கிலத்தில் பழமொழி உண்டு. லோகல் போர்டுக்குப் பிரதிநிதித்துவம் கொடுக்க வேண்டும் என்று அந்த ரிபோர்ட்டில் இல்லையே என்று தனக்கு உதவியாகத் திரு சத்தியமூர்த்தி அய்யர் சொல்லுவாரானால், அதுவும் பிழையே ஆகும். கல்வி ஸ்தாபனங்கள் ஒவ்வொன்றுக்கும் இவ்வளவு இவ்வளவு பிரதிநிதித்துவம் உள்ளடக்க வேண்டுமென்று [illegible] சொல்லாமட்டு, பின்னும் சேர்த்தாப் போல் சொல்லுவதாவது.— "கல்வி ஸ்தாபனங்களல்லாத பிற பொது ஸ்தாபனங்களிலிருந்தும் பிரதிநிதிகள் தேர்ந்தெடுத்தனுப்பப்படல் வேண்டும்" யுனிவர்சிடி அங்கத்தினர் திரு. சத்தியமூர்த்தி அய்யரைப்போல் வகுப்புத் துவேஷத்திலேயே மூழ்கிக் கிடக்காத சேட்லர் கமிட்டியானது, செனேட்டிலுள்ள எல்லாப் பிரதிநிதிகளுமே பி. ஏ. பட்டதாரிகளாலேயே தேர்ந்தெடுக்கப்பட்டு பட்டதாரிகளாலேயே சகல காரியங்களும் நடத்தப்பட வேண்டுமென்று அபிப்பிராயப்படவில்லை. அப்படியிருந்தால் சேட்லர் கமிஷனின் [illegible] நம் நாட்டிலுள்ள பல்வேறு பொது ஸ்தாபனங்களுக்குப் பிரதிநிதித்துவம் வழங்குவது தான் என்ன? அந்த ரிபோர்ட்டை [illegible] பார்க்கும் [illegible] மக்கள் எல்லோருக்கும் [illegible] விளங்கும். அந்த ரிபோர்ட்டில் மற்றும் சொல்லுவதாவது "சட்டசபையிலிருந்து [illegible] அங்கத்தினர்கள் செனேட்டுக்கு பிரதிநிதிகளாகத் தேர்ந்தெடுத்தனுப்பப்படல் வேண்டும்" திரு. சத்தியமூர்த்தி அய்யரின் மசோதாவால் இந்த சென்னை சட்டசபைக்குச் செனேட்டிலுள்ள தன் பிரதிநிதித்துவ உரிமை ஒழியப் போகிறது! மற்றும் சேட்லர் கமிஷன் சொல்லுவதாவது:— "ஹைகோர்ட்டு ஜட்ஜிகளிலிருந்து 5 பிரதிநிதிகள் செனேட் சபைக்குத் தேர்ந்தெடுத்தனுப்பப்பட வேண்டும்" சென்னையிலுள்ள ஹைகோர்ட்டு ஜட்ஜுகளுக்கு அவ்வுரிமை இதுவரை வழங்கப்படவில்லை. மற்றும் கல்கத்தா கார்ப்பொரேஷன், வர்த்தகச் சங்கம், தேசிய வர்த்தக சங்கம், மார்வாரி சங்கம், ஜமீன்தாரர்களின் சங்கம், இந்திய எஞ்சினீயர்கள் சங்கம், வங்காள பாங்கு முதலிய அப்பொழுது [illegible] சபையால் சேர்க்கத் தொண்டு புரியும் பொது ஸ்தாபனங்களிலிருந்தும் பிரதிநிதிகள் அனுப்பப்பட வேண்டும், என்று [illegible] கமிஷன் தன் ரிபோர்ட்டில் எழுதியிருக்கிறது. இப்படியானால் அவ்வப்போது சட்டசபையில் சேர்த்துக் கொள்ளப்படுகிற பொது ஸ்தாபனங்கள் என்பதும் போதாதா? இதிலிருந்து உண்மை திரு சத்தியமூர்த்திக்கு விளங்கவில்லையென்று இதைவிட விபரமாக எழுத முடியுமா? இன்னும் அய்யர் லோகல் போர்டுகளுக்கு செனேட்டில் பிரதிநிதித்துவம் கொடுக்க வேண்டுமென்று சேட்லர் கமிஷன் சொல்லவில்லையே யென்று [illegible] வாபஸ் வாங்கிக் கொள்ள மறுக்கப்போகிறாரா?

நான் இன்னு மதிகமாக ஒன்றும் சொல்லப் போவதில்லை. எனது மதிப்பிற்குரிய நண்பர் பேசிக் கொண்டிருக்கும் போது ஒரு யோக்கியர் அவர் [illegible] கட்சியின் அபிப்பிராயத்தையும் தனது கட்சியின் அபிப்பிராயத்தையும் தனது தலைவரான கல்வி மந்திரியாரின் அபிப்பிராயத்தையும் தானே [illegible] என்று பயந்து நடுங்கிக் கொண்டிருந்தேன்! எனது நண்பர் கல்வி மந்திரி எழுந்து பேசியதிலிருந்துதான் எனக்கும் பெரும் பகுதி மனதுக்கும் கொஞ்சம் ஆறுதல் அளிக்கிறது. "இச்சபையில் மாத்திரமல்ல இந்நாட்டிலும், உள்ள பெரும் ஜனங்களிடம் இம்மசோதாவினால் உண்டாயிருக்கிற உணர்ச்சியையும் ஆத்திரத்தையும் சாந்தப்படுத்தவே நான் எழுந்ததன் [illegible] கூடுமான வரையில் மக்களின் உணர்ச்சியை நான் திருப்தி செய்ய முயற்சிக்கிறேன்" இவைதான் மந்திரியின் நன்மொழிகள் பொன்மொழி போற்றத்தக்க மொழிகளுக்கும் அதற்காக நாங்களெல்லாம் மந்திரியவர்களுக்குக் கடமைப்பட்டிருக்கிறோம். தனக்கு எதிரில் உட்கார்ந்திருக்கும்

இதன் தொடர்ச்சி 14-ம் பக்கம் பார்க்க.

vailable.
ரோஜா முத்தையா
ஆராய்ச்சி நூலக அறக்கட்டளை

குடி நூல்.

அகில பாரத சர்க்கா சங்கத்தின் தமிழ் நாட்டுக் கிளையாரால் மாதம் இருமுறை கத்தரைப்பற்றி மாத்திரம் எழுதப்பட்டுப் பிரசுரிக்கப்படும் எட்டுப் பக்கங்களடங்கிய கதர்ப்பத்திரிகை.

எல்லா மக்களும் படிக்கவேண்டும் என்ற எண்ணத்தோடு வருட சந்தா ரூபாய் ஒன்று அல்லது 8000 கஜம் கைநூல் என்று தீர்மானித்திருக்கிறது.

சந்தாவை முன்னதாகவே அனுப்பவேண்டும். வி. பி. யில் அனுப்புவதில்லை. இதை எல்லோரும் ஆதரிக்கவேண்டுமாய்க் கோருகிறோம்.

மானேஜர்,
சர்க்கா சங்கம், ஈரோடு.

நூதன ஜர்மன் எலக்டிரிக் விளக்கு.



இதை மேஜையின் பேரிலும், சுவற்றிலும், வைக்கலாம். இரா த்திரியல் படுக்கையிலிருந்தபடியே விளக்கை சுற்றில் கண்ட கயிற்றின் (wire) உதவியால் எரியவும் நிறுத்தவும் செய்யலாம். பயமாற்று அடித்தாலும் எரியும். பிரகாசம் கண்ணைப்பறித்துக் கொண்டு போகக்கூடியது. விசேஷ காலங்களில் வைத்தால் கிராமஜனங்கள் அதிசயத்தைப்பார்க்கக் கும்பலாகக் கூடிவிடுவார்கள். மிக ஜாக்கிரதையாக பாக்கிங் செய்தனுப்பப்படும். குறைந்த விலை ரூ. 4—8—0 தபால் செலவு 0—3—0.

பாரிஸ் எம்போரியம், ஜி. டி.
மதராஸ்

சந்தா நேயர்களுக்கோர் அறிவிப்பு.

நமது சந்தா நேயர்கள் தங்களுக்குப் பத்திரிகை சரிவர கிடைப்பதில்லையென்று அடிக்கடி நமக்கு கடிதம் எழுதிவருகிறார்கள். ஆனால் நாம் அவைகளைக் கவனிக்குங்காலத்தில் அன்னார்களுக்குப் பத்திரிகை கிரமமாகத்தான் அனுப்பப்பட்டு வருகின்றன. நாங்களும் ஆபீசில் ஒரு தடவைக்கு மூன்று தடவை விலாசங்களை கணக்கிட்டு சரிபார்த்து அனுப்பிவருகிறோம். ஒருகால் மேற்படி சந்தா நேயர்களின் பத்திரிகைகளை அன்னார்களின் சிநேகிதர்களோ மற்றும் பந்துக்களோ பெற்றுக்கொண்டிருப்பிக்கொடுக்காமலிருக்கலாமோவெனச் சந்தேகிக்கவேண்டியிருக்கிறது. சந்தா நேயர்கள்தயவுசெய்து இனிமேல்எங்களுக்குக் கடிதம் எழுதினாலும், சந்தா தொகையை மணியார்டர் மூலம் அனுப்பினாலும் முழு விலாசத்தை விபரமாய் எழுதுவதுடன் சந்தா நெம்பரையும் குறித்தெழுதுமாறு கேட்டுக்கொள்ளுகிறோம்.

மானேஜர், "குடி அரசு" ஆபீஸ்.

நமக்கேற்ற நவீனக நாவல் — நாவலிற்சிறந்த நவீனக நாவல்

உங்கள் ஆர்டரை உடனே எழுதுங்கள்

அவசியம் அறியவேண்டியது நிஜம், — அனந்த ரகசியம் அற்புத ஜோசியம்

அனைவரும் படித்து அதிசயிக்கக்கூடிய

இரங்கூன் இரகசியம். ஓர் இனிய செந்தமிழ் நாவல்.

செந்தமிழ்ச் சகோதரர்காள்! எடுத்துப்படித்து முடிக்கும்வரை கீழே வைக்க மனம்வராது. ரசஸீகம், நவீனகம், புதினம், கற்பனை, கற்பிதம் முதலிய அலங்காரமமைந்தது. அறிவை விளக்கி அகமகிழ்ச்செய்வது. மோசம் நாசம் கம்பளி வேஷம் போடும் வெற்றுப்பிழைப்பாளரின் சாமர்த்தியத்தை விளக்கிக்காட்டுவது. அந்நிய தேச ஜீவனும்சஞ்சலம் கஷ்டநஷ்டத்தின் பலனை பிரதிப்பது. தம்பதிகளின் சுகமான வாழ்க்கையதனை நலம் சாற்றுவது. பேராசை பெருநஷ்டமென்னும் புத்தி புகட்டுவது. மனிதன் சஞ்சலத்தை நீக்கிச் சந்தோஷம் கொடுப்பது. மாயப் பரதேசிகள் வழிப்பறிக் கொள்ளைக்காரர்களின் வஞ்சகச்செயலை உள்ளங்கை நெல்லிக்கனிபோல் வெடுத்துக்காட்டும் ஒன்றியமையாத இயல்புடைய முதல்தரமான நாவல். 200 பக்கம் அழகிய பிரிண்ட், அருமையான ராப்பர் பயண்டு. புஸ்தகம் ஒன்றுக்கு விலை ரூ. 1—0—0 வி. பி. தபால்செலவு வேறு.

விலாசம்:—பஞ்ச சக்தி புத்தகசாலை,
தபால் பெட்டி P. நெ. 1051, 63. 29-வது தெரு, இரங்கூன்

அருப்புக்கோட்டை "நாடார்குல மித்திரன்" சேர்ப்பு நிதிக்காய பண்டு லாட்டரிச் சீட்டு.

சீட்டு 1 க்கு ரூ 1 வீதம் மொத்தம் சீட்டுகள் 33000-க்கு 338 பிரைஸ்கள்

1-வது பிரைஸ் ரூ 3000. 2-வது பிரைஸ் ரூ. 1500, 3-வது பிரைஸ் ரூ 1000 4வது பிரைஸ் ரூ. 500, 5, 1-வது பிரைஸ் ரூ. ரூ 200.

100 ரூபாயில் 5 பிரைஸ்களுக்கு ரூ. 500 ரூ. 50ல் 20-க்கு ரூ. 1000, ரூ 20ல் 50க்கு ரூ. 1000, ரூ. 10ல் 100க்கு ரூ. 1000, ரூ 5ல் 200க்கு ரூ. 1000, ரூ. 3ல் 600க்கு ரூ. 1800, ரூ. 2ல் 2400க்கு ரூ. 4800. ஆக பிரைஸ் 3381க்கு ரூ 17500. புக 1500க்கு கமிஷன் ரூ. 1000, முஸ்தா சம்பளம், அச்சுக்கூலி, விசேஷ கமிஷன் ரூ 1800 தனப்பிரைஸ் ரூ. 1700, பண்டுக்கு ரூ 9000 ஆக ரூ 33000.

1. (4—5—1927) பிரபவ-ஹூ சித்திரை-மீ 22-ந் புதன்கிழமையன்று பரைஸ் எடுக்கப்படும்.

2. 33000 சீட்டுகளுக்குமேல் விற்பனையாகுமானால் ஈவுப்படி பண்டுக்கும் செலவுக்கும்போக மீதித்தொகையை 4 ரூபாய் பிரைஸ்களாக எடுக்கப்பெறும். சீட்டு விற்பனை குறைந்தால் ஈவுப்படி குறைக்கப்பெறும்.

3. 1-வது பிரைஸ் முதல் 6-வது பிரைஸ்வரை விழுந்த புள்ளிகளுக்கு முறையே 150, 75 50, 25, 10, 10 ரூபாய் சீட்டு விற்றவர்களுக்கு கமிஷன் பிடித்துக் கொடுக்கப்பெறும்.

4. பிரைஸ் விழுந்த புள்ளிகள் ஒரு மாதத்திற்குள் சீட்டை அனுப்பி பணம் பெற்றுக்கொள்ளவேண்டும். வெளியூர் புள்ளிகளுக்கு மணியார்டர் கமிஷன் கழித்து பரைஸ் தொகையை அனுப்பப்படும்.

5. சகலவிதமான கடிதப் போக்குவரத்தும் ஸ்ரீ சு. ஆ. முத்துசாமி நாடார் பத்திராதிபர், "நாடார்குல மித்திரன்" ஆபீஸ், அருப்புக்கோட்டை என்ற விலாசத்துக்கு அனுப்பவேண்டும். புஸ்தகம் விற்றவர்கள் தவிர மற்றவர்கள் ரிப்ளை கார்டு எழுதவேண்டும்.

சு. ஆ. முத்து நாடார், பத்திராதிபர்.

திருப்பூர் சுத்த கதர் ஜவுளிகள்.

பலரகம் வேஷ்டிகள், துண்டுகள், வெள்ளை பீஸ் ரகங்கள், ஷர்ட்டிங், கோட்டிங், சீட்டி தினுசுகள், நாவணங்கள், சுங்கடி சேலைகள் இன்னும் அநேக தினுசுகள் எங்களிடத்தில் கிடைக்கும். தேவைக்கு ஆர்டர் செய்யுங்கள். வி. பி. அனுப்ப முடியாத வெளிநாடுகளுக்கு பூராத் தொகையையும் முன் பணமாக அனுப்பவேண்டும்.

(அத்தாட்சி பத்திரம்.)

ஸ்ரீமான் ஆர். எம். எஸ். சிதம்பரம் செட்டியார், முத்துசாமி செட்டியார் கைநூலால் கைத்தறியால் தயார்செய்யப்பட்ட சுத்த கத்தர் துணிகளையே உற்பத்திசெய்து நியாயமான விலைக்கு விற்றுவருகிறார்.

S. ராமநாதன், காரியதரிசி, கத்தர் இலாகா

விலாசம்:—

ஆர். எம். எஸ் சிதம்பரம் செட்டியார்,
முத்துசாமி செட்டியார்,
கத்தர் டிப்போ, திருப்பூர். (தென் இந்தியா)

இனாம்! இனாம்

முனையில் இரிடியம் உள்ள 14 Kt. தங்க நிப்பு போட்ட Self-filling பௌண்டன்பேனா இனாம்.



வாங்குகள் 18 காரட் ரோல்டு கோல்டு பிண்டும் சித்திர வேலை செய்யப்பட்ட லீவர் பாக்கெட் கெடியாரம் வாங்குகிறவர்களுக்கு மேல்சொல்லியபடி பௌண்டன் பேனா இனாமாய் அனுப்பப்படும். கடியாரம் விலை ரூ 4-12-0. 5வருஷம் உத்தரவாதம். உடனே எழுதுங்கள்.

CANADIAN WATCH PEOPLE,
George Town, Madras



பெட்ரோமாக்ஸ் லைட்

லைட்கள், மாண்டில், டூம், தனித்தனி சாமான்களும் விலைசயமாய் கிடைக்கும். கேட்லாக் இனாம்.

ஸன் கம்பெனி, தஞ்சாவூர்

நமது அச்சுக்கூடத்தில்

பலதிறப்பட்ட ஜாப வேலைகள் அழகாகக் குறித்த காலத்தில் செய்துதரப்படும்

மானேஜர்:—
உண்மை விளக்கம் பிரஸ், ஈரோடு.

ஸ்ரீமதி நாகம்மாளவர்களால், ஈரோடு "உண்மை விளக்கம்" பதிப்பகத்தில் பதிப்பிக்கப்பெற்று வெளியிடப்பட்டது.

ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலக அறக்கட்டளை